பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

நவம்பர் 2019



## ஆப்ரிக்காவில் பழந்தமிழர் தடம் தேடும் தமிழ் பெண் நாச்சியார்

நேர்காணல்




பிரமாண்டமாகத்
தயாராகிவரும்
ஹைக்கூ சாதனை நூலில்
தங்களது ஹைக்கூவும்
இடம்பெற விரைந்து
தொடர்புகொள்ளவும்.

editor@tamilnenjam.com



நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 | நவம்பர் 2019

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
அமின் மொஹமெட்

*இணையாசிரியர் :*
முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

*நிர்வாக ஆசிரியர் :*
சஃபி மொஹமெட்

*ஆசிரியர் குழு :*
ஹிப்ஸ்ரீ ரஹ்மான்
நெல்லை உலகம்மாள்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிஞர் பாலமுனை பாறூக்

*ஆலோசகர்கள் :*
பாட்டரசர் கி. பாரதிதாசன்
கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# ஐக்கூவும் தமிழ்வார்ப்பே

புதுக்கவிதை புதுக்கவிதை என்றே யின்று
புகழ்ந்திங்கே புகல்வோரே எண்ணிப் பாரீர்
புதுக்கவிதை தனிலுரைத்தால் மக்க ளுக்குப்
புரிந்துவிடும் எளிதாக எனச்சொல் வோரே
இதுதான்பா எனமரபில் பகர்வோர் தம்மை
இருட்டடிப்பு செய்திங்கே ஒதுக்கு வோரே
எதுகவிதை என்பதினைத் தமிழி லுள்ள
எழிற்கவிதை தனைப்படித்தே அறிந்து ரைப்பீர் !

அடியொன்றில் இயற்றிட்ட கவிதை தானே
அறநெறியைச் சொல்கின்ற ஆத்திச் சூடி
அடியிரண்டில் இயற்றிட்ட கவிதை தானே
அகிலமெல்லாம் போற்றுகின்ற மறையின் முப்பால் !
அடிநான்கில் முக்கருத்தைச் சொல்லும் பாட்டே
அழகுபழ மொழியென்னும் வெண்பாப் பாட்டு
கடிகையொடு ஏலாதி பஞ்ச மூலக்
கவிதையெல்லாம் எளிதாகப் புரியும் பாட்டே !

குறுந்தொகையின் பாட்டென்ன விளங்கா பாட்டா
குறுகியநல் சிந்தியலும் அகவல் யாப்பும்
நறுங்கருத்தை எளிமையாகச் சொல்லு தற்கு
நம்முன்னோர் கண்டளித்த எளிய பாக்கள் !
குறுமையெனும் ஐக்கூவும் லிமிரைக் காவும்
குட்டையான சென்ட்ரீயும் தமிழின் வார்ப்பே
கறுந்திரையாம் எண்ணத்தை கழற்றி விட்டுக்
கனித்தமிழின் மரபினிலே எழுத வாரீர் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



நாச்சியார், ஒரு தொழில்முறை சமூக பணியாளர், பயிற்றுநர், எழுத்தாளர், பேச்சாளர், தற்போது வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான ஒரு பன்னாட்டு இதழின் துணை ஆசிரியராகவும் பங்களித்து வருகிறார். அவரை தமிழ்நெஞ்சம் இதழுக்காக நேர்காணல் செய்தோம். நிறைந்த புன்னகையுடன் வரவேற்றுக்கொண்டார். இனி அவருடைய நேர்காணலுக்கு வருவோம்.

# ஆப்ரிக்காவில் பழந்தமிழர் தடம் தேடும் தமிழ் பெண்



# நாச்சியார்

**உங்களை பற்றிய ஒரு அறிமுகம், நீங்கள் கடந்து வந்த பாதை?**

தரணி போற்றும் தஞ்சை மாநகருக்கு அருகில் ஒரு சிறு கிராமத்தில் சாதாரண விவசாய பின்னணி கொண்ட குடும்பத்தில் மூத்த பெண்பிள்ளையாக பிறந்த எனக்கு எதுவும் அத்துணை சுலபமாக கிடைத்துவிடவில்லை. வாழ்வின் ஒவ்வொரு நிலையை எட்டவும் நான் மிகவும் போராட வேண்டி இருந்தது. கிராமத்து பெண் பிள்ளைகளுக்கு இந்த காலகட்டத்திலும் எட்டாத விடயமாக சில விடயங்கள் இருக்கும் நிலையில், 80, 90 களில் அத்துணை சுலபம் இல்லை. ஆனால் அத்துணையும் நான் கடந்து வரக் காரணமாக இருந்தவர் என் பாட்டி, என் தந்தையின் தாயார். செல்ல மகளாக பிறந்து, சீராய் வளர்க்கப்பட்டு, இருபதுகளின் கடைநிலையில், கைம்பெண்ணாய் ஐந்து பிள்ளைகளுடன் அவர் கடந்து வந்த பாதைகள் தான் "பெட் டைம் ஸ்டோரி" என சொல்லப்படும் எனது இரவு நேர கதைகள். இருளின் பின்னணியில், நிசப்தமான கனத்த இரவுகளில் ஊர் உறங்கும் வேளையில் என்னை மடியில் சாய்த்துக்கொண்டு "கேளு மரப்பாச்சி கேளு நான் உனக்கே சொல்றேன் கேளு" என்று தன் வாழ்வின் அவலங்களை தழுதழுத்த குரலில் சொல்லும் போது அழுது கொண்டே உறங்கி விடுவேன்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரத்தயங்கும் அந்த கால கட்டத்தில், அத்துணை

ஆண்களுக்கு மத்தியில் எல்லாவற்றையும் எதிர்த்து தன் பிள்ளைகளை படித்து வைத்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கோடு அரும்பாடு பட்ட ஒரு பெண்ணின் வளர்ப்பு தான் நான். எதற்கு கலங்க கூடாது, திருட கூடாது, ஏமாற்றி உடல் வளர்க்க கூடாது, தவறு செய்து பிழைக்கக்கூடாது என்று அவர் சொல்லிவளர்த்த வார்த்தைகளே இன்று நான் இத்துணை தடைகளை கடந்து வெற்றி பெற காரணம். உண்மையில் இந்த உலகத்தில் கணவனில்லாமல் தன் பிள்ளைகளை வளர்க்கும் அத்துணை பெண்களும் இரும்பு பெண்மணிகளே.

பெண் பிள்ளைகள் படித்து என்ன செய்யப்போகிறார்கள் என்று நினைத்த ஆண்ட சமூகம் என்று சொல்லிக்கொள்ளும் எங்களதுஉறவுகளுக்குமத்தியில்,என்னைஒரு டிகிரி படிக்க வைத்துவிட வேண்டும் என்பதே அவரின் பெருங்கனவாக இருந்தது. எனது பதின்ம வயதின் தொடக்கத்தில் அவரை நான் இழந்ததே, என் வாழ்க்கையில் நான் பார்த்த முதல் இழப்பு மற்றும் பேரிழப்பு. அவரிடம் வளர்க்கப்பட்ட நான், அவர் இறப்புக்கு பின்னால் சொந்த உறவுகளாலேயே அலைக்கழிக்கபட்டதுதான், மனிதர்களின் கோரமுகங்களை நான் பார்த்த முதல் தருணம். அப்போது தான் எனக்கு புரிந்தது நான் ஏன் அப்படி அத்துணை உரத்துடன் வளர்க்கப்பட்டேனென்று. சமீபத்தில் ஊருக்கு சென்றிருந்த போது. எங்களுடைய கழனியில் வேலை செய்த ஒருவர், அந்த தள்ளாத முதுமையிலும் என்னை அடையாளம் கண்டு «அப்படியே ஆச்சியை பார்க்கிற மாதிரி இருக்கே» என்று கலங்கியபோது எப்பேர்ப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருக்கிறாள் அந்த மனிதி என்று பெருமிதம் கொண்டேன்.

சுய முயற்சியுடனும், நிறைய நம்பிக்கையுடனும் முதுகலை சமூகப்பணி, சமூக பணியில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றேன். சிறு வயதில் இருந்தே ஆசிரியராக வேண்டுமென்பது கனவு, எனது சித்தப்பா அவர் படித்த கல்லூரியிலேயே பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றார். எனது பாட்டி என்னிடம் «சித்தா மாதிரி நீயும், படிச்ச காலேஜிலேயே வேலைக்கு சேர்ற அளவுக்கு நல்லா படிக்கணும் என்று சொல்வார். எனவே, எனக்கும் கல்லூரி நாட்களில் இருந்தே ஒரு பேராசிரியராக வேண்டுமென்பது கனவு. ஆனால், இப்படி சமூகப்பணியாளராவேன் என்று ஒரு போதும் நினைத்ததில்லை.

உங்களுடைய கணவர், குடும்பம் பற்றி சொல்லுங்களேன்..

எனது கணவர் திரு. அருளானந்தம் அவரும் ஒரு சமூக பணியாளர். எங்களுடைய லா ஜீனி நிறுவனத்தில் துணை இயக்குனராகவும், பல்வேறு லாப நோக்கற்ற அமைப்புகளுக்கு ஆலோசகராகவும் உள் ளார்.

எனது மாமனார் ஓய்வு பெற்ற முன்னாள் ராணுவவீரர், முரட்டு மீசைக்கு சற்றும் சம்பந்தமில்லாத குழந்தை மனதோடு இருப்பவர், மாமியார் இல்லத்தரசி தொலைக் காட்சியிலோ / திரைப்படத்திலோ வருபவை சித்தரிக்கப்பட்ட காட்சிகளே என்றாலும் உச்சு கொட்டி பரிதாபப்படும் ஒரு வெள்ளந்தி மனுஷி, முறையில் மைத்துனர் என்றாலும் ஒரு சகோதரரின் அன்போடும் நட்போடும் இருக்கும் அண்ணன் ஒரு தனியார் மென்பொருள் நிறுவனத்தில் மென்பொருள் பொறியாளராக பணி புரிகிறார், எனது அண்ணி அதாவது எனது கணவரின் சகோதரி ஒரு நல்ல தோழி அழகான கூடு எங்களுடையது.

உங்களுடைய பணி...

இப்போது இருக்கும் காலகட்டத்தில் இருக்கும் மக்கள்தொகைக்கு ஏற்ப அரசாங்கத்தால் மக்களுக்கு தேவையான எல்லா நலத்திட்டங்களையும் கொடுத்துவிட இயலாது. இம்மாதிரியான தருணங்களில் மக்களுக்கு உதவவேண்டும் என்ற சீரிய நோக்கோடு செயலாற்றுபவைதான் லாப நோக்கற்ற அமைப்புகள் (தொண்டு நிறுவனங்கள்). கடந்த

12 ஆண்டுகளாக ஒரு சமூக பணியாளராக பலதரப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பணியாற்றும் பல்வேறு பன்னாட்டு தொண்டு நிறுவனங்களில், இந்தியா மற்றும் ஆப்ரிக்காவில் பணிபுரிந்துள்ளேன். குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக இயங்கிவரும் நிறுவனங்களில்பணிபுரிந்துள்ளேன்.தான்சானியா வின் முன்னணி நிறுவன மொன்றின், சமூக சார்ந்த அமைப்பு ஒன்றில் மேலாளராக பணியேற்று பின்னர் அதே நிறுவனத்தில் மனிதவளத்துறை மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் சிறிது காலம் பணியாற்றியுள்ளேன்.

**உங்களுடைய பணி, உலகம் கூர்ந்து நோக்குமளவுக்கு நல்ல நேரிய செயல் பாடுகள் உடையதாக இருக்கிறது, அது குறித்து இன்னும் சற்று விளக்கமாக சொல்லுங்கள்...**

ஏழை, எளிய அல்லது குடும்ப மற்றும் சமூக வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களை ஒன்றுதிரட்டி அவர்களை சுயஉதவி குழுக்களாக ஒருங்கிணைத்து, பலதரப்பட்ட பயிற்சிகள் அளித்து தனிப்பட்ட நன்கொடையாளர்கள் அல்லது நன்கொடை செயலாண்மை மூலம் நிதியுதவி பெற்று அவர்கள் சுயதொழில் தொடங்க வாய்ப்புகள் உருவாக்கி அவர்களின் வறுமையை வெல்ல அவர்களுக்கு துணிவும் நம்பிக்கையும் வழங்குவது; குறு / சிறு பெண் விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களுடைய விளைபொருட்களுக்கான நேரடி அல்லது மறைமுக சந்தை வாய்ப்பை விவசாயிகள் கூட்டுறவு சங்கம் அமைப்பது மூலமாகவும், உணவு பதப்படுத்துதல் துறையில் உள்ள நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி தருவதன் மூலமும் அவர்களுக்கான நிரந்தர வருமானத்தை உறுதிப்படுத்தி வாழ்வாதாரத்திற்கு வகைசெய்தல் போன்ற செயல்பாடுகளை திட்டமிட்டு செயல்படுத்திவந்துள்ளேன். குழந்தைகளை பொறுத்த மட்டில், குழந்தை தொழிலாளர்கள் மற்றும் கடத்தப்பட்ட குழந்தைகளுக்கான மீட்பு மற்றும் மறுவாழ்வு சம்பந்தப்பட்ட திட்டத்திலும் பணியாற்றியுள்ளேன். மாற்றுத்திறனாளிகளுக்கான அடிப்படை உரிமைகளை காக்கும் பொருட்டு, முறைசாராக்கல்வி மூலம் பயிற்றுவித்தல், அரசு

தான்சானியா தமிழ்ச்சங்கத்தில் ...






தான்சானியா தமிழ்ச்சங்கத்தில் ஜல்லிக்கட்டு போராட்ட நிகழ்வை முன்னின்று நடத்தியபோது.

மருத்துவ துறையோடு இணைந்து இலவச சிகிச்சை, இலவச மூன்று சக்கரவண்டி / சக்கர நாற்காலி, ஊன்றுகோல் இவற்றை பெற்று தருதல், அவர்களின் சுயமரியாதையை காக்கும் பொருட்டு நிரந்தர வேலைவாய்ப்பிற்காக ஆர்வம் மற்றும் தகுதி சார்ந்த முறையான தொழிற்பயிற்சியை ஒருங்கிணைத்தல் போன்றவற்றை செய்துள்ளேன். அதுமட்டுமல்லாது, தான்சானியாவில் வசிக்கும் இந்திய முதலீட்டாளர்களுக்காகவும் மற்றும் லாபநோக்கு பெருநிறுவனங்களுக்காகவும் இந்திய தூதரகத்தால்நிறுவப்பட்டலாபநோக்கற்ற அமைப்பான “இந்திய வர்த்தக பேரவையில்” மேலாளராகவும் பணியாற்றியுள்ளேன். இதன் மூலம் இருநாடுகளுக்கு (இந்தியா - தான்சானியா) இடையேயான வர்த்தக உறவை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு அரசு நிகழ்வுகள், முதலீட்டு சந்திப்புகள், இந்திய வர்த்தக கண்காட்சி போன்ற நிகழ்வுகளை ஒருங்கிணைத்துள்ளேன்.

பிறப்படுத்தப்பட்ட பெண்களுக்கான சுயஉதவி குழுவின் தொழில்முனைவோர் திட்ட பயிற்சியில்



தற்போது லா ஜீனி என்ற ஒரு ஆலோசனை மையத்தை நிறுவி, அதன் மூலம் லாப நோக்கற்ற அமைப்புகளுக்கும் அது சார்ந்த பணிகளுக்கும் ஆலோசனையும், பயிற்சியும் அளித்துவருகிறோம். அத்துடன் சமூகப்பணி மாணவர்களுக்கும், பிற துறை மாணவர்களும் துறை ரீதியான சில ஆளுமை திறன், ஆற்றல் திறன் பயிற்சிகளை வழங்கி வருகிறோம். மேலும், இரண்டு வலையொளி தளத்தில் இருந்து இணைந்து பணியாற்ற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளேன். சுயமாக ஒரு வலையொளி அலைவரிசை தொடங்கவும் எண்ணம் உள்ளது, பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

### உங்களுக்கு சமூகப்பணி செய்ய உந்துசக்தியாக இருப்பது எது? எதை நோக்கிய சமூகப்பணியைத் தொடர்கிறீர்கள்?

எனது பாட்டி யாசிப்பவர்களுக்கு,

அவர்களை திண்ணையில் அமரவைத்து பக்கத்தில் இருந்து பரிமாறுவார், எனது தந்தைக்கும் அதே குணம். பிறருக்கு உதவுவது என்பது எனது பாட்டியிடமும், தந்தையிடமும் இருந்து மரபு ரீதியாகவே நான் பெற்ற பண்பு. மேலும் இந்த சமூகமும், அது கற்று தந்த மற்றும் கற்றுத் தந்துகொண்டிருக்கிற பாடமும் தான் என்னுடைய பணிகளுக்கு உந்தி சக்தி. நான் முன்பே கூறியபடி அரசாங்கத்தால் ஒவ்வொரு தனிநபரையும் கவனித்து செயல்பட இயலாது. சில சமயங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் கடைநிலையர் வரை கருத்தில் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படுவதில்லை, சில சமயங்களில் அவ்வாறு நலத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும் கடை நிலைக் குடிகளை சென்று சேர்வதில்லை. அதுபோல உழைப்பு மற்றும் அதிகாரம் சுரண்டப் படுதல் என்பது வீட்டில் ஆரம்பித்து நாட்டின் உயர்ந்த பதவிகள் வரை எல்லா இடத்திலும் உள்ளது. இம்மாதிரியான அலட்சியங்கள் உயர்தட்டு மக்களை பெருமளவு பாதிப்பதில்லை, பாதிப்பிற்கு உள்ளாவோர் ஏழை எளிய மக்களே. கண்முன்னே நடக்கும் இம்மாதிரியான விடயங்கள் என்னை நான் சார்ந்துள்ள சமூகத்திற்கு என்னாலான பங்களிப்பை செய்ய தூண்டுகிறது. ஒரு குழந்தை / பெண் / மாற்றுத்திறனாளி அல்லது ஒடுக்கப்பட்ட யாரேனும் ஒருவரின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும், மேலும் நமது சமூகத்தில் புழுத்து புரையோடிக்கொண்டிருக்கும் ஏதேனும் ஒரு விடயத்தை கையிலெடுத்து சமூகத்தில் சிறு மாற்றத்தையேனும் காணவேண்டும் என்ற இலக்கை நோக்கி பயணித்து வருகிறேன்.

**உலகநாடுகளில் நிறைந்த பயணத்தை கொண்டிருக்கிறீர்கள், பயணத்தினால் ஏற்படும் அனுபவங்களை பகிருங்கள்..**



தான்சானியா பள்ளியொன்றில் அவரது நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்ட மதிய உணவு(கஞ்சி) திட்டம் ஆய்வுக்கு பின் குழந்தைகளுடன் ...



தான்சானியாவின் பிரபலமான மிக்குமி தேசிய பூங்காவில்

தான்சானியாவில் ஒரு பள்ளியில் கல்வி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பின் குழந்தைகளோடு



உலகநாடுகள் என்று சொல்வதை விட ஆப்ரிக்க நாடுகளில் பணிரீதியாக பயணித்திருக்கிறேன். பொதுவாகவே நான் பயணங்களை அதிகம் விரும்புபவள், அதற்கேற்பஎனது பணியும் அமைந்ததேவரம். புத்தகங்கள் கையடக்க தத்துவார்த்த ஆசிரியர் என்றால் பயணங்கள் ஒரு நடைமுறை அனுபவபூர்வ ஆசிரியர். பயணங்கள் நமக்கு நிறைய கற்றுத்தருகின்றன, புதிய மக்களின் அறிமுகம், அவர்களின் மொழி, கலாச்சாரம், உணவு, வழிபாட்டு முறைகள், இனம் சார்ந்த கொள்கைகள். பொதுவாக நாம் வெளிநாடுகளில் பயணம் செய்யும் போது, அதிகம் ஒப்பீடுகள் செய்வோம். குறிப்பாக மொழி, உணவு, உடை மற்றும் பழக்கவழக்கம். அப்படி ஏற்பட்ட ஒரு அனுபவம் தான் ஒரு முழுநேர சமூக பணியாளராக இருந்த என்னை எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், ஒரு பன்னாட்டு தமிழ் இதழுக்கு துணை யாசிரியர்களுள் ஒருவராகவும் பங்களிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது. இன்னும் நிறைய பயணிக்க வேண்டும். என்னை பொறுத்தமட்டில், தேடல் இல்லா மனிதன் அரை மனிதன்.

**இலக்கியம் சார்ந்த பங்களிப்பில் இருந்துநீங்கள்கற்றுக்கொண்டுள்ள பாடம் எதை நோக்கியதாய் இருக்கிறது?**

கற்றுக்கொண்டுள்ள பாடமா? இலக்கியம் என்பது ஒரு கடல். இலக்கியத்தை பொறுத்தமட்டில் நான் இப்போது மழலைவகுப்பு மாணவி தான், கற்றது கையளவே, இன்னும் கற்றுக்கொள்ள எவ்வளவோ உள்ளது. தேடல் இருக்கும் போதுதான் வாழ்க்கை சுவராசியமாக இருக்கும். இயன்றவரை சங்கஇலக்கியங்களை படித்து தமிழின் வரலாறும், தமிழினத்தின் வரலாறும், நமது இலக்கியங்கள் சொல்லும் வாழ்வியல் முறைகளையும் கற்று தெளியவேண்டும்.

**உலகளாவிய அளவில் செயல்படும் ஐயை குழுவில் சொல்லத்தகுந்த நபராக விளங்குகிறீர்கள். அக்குழுவில் தங்களின் பங்களிப்பு என்னவாகவிருக்கிறது.**

ஐயை என்பது பலதரப்பட்ட துறையில் மிளிரும் பெண்களை ஒருங்கிணைக்க உருவாக்கப்பட்ட ஒரு லாபநோக்கற்ற பெண்கள் குழு. இது ஒரு கற்றலுக்கான இடம், பொதுமேடை. என்னதான் பெண்கள் தகுந்த கல்வியறிவும், தகுதியும், திறனும் பெற்றவர்களாக இருந்தாலும், எல்லாருக்கும் தங்களின் கனவு இடத்தை அடைய வாய்ப்பும், மேடையும் கிட்டுவதில்லை. இப்போது என்னை எடுத்து கொள்ளுங்கள் நான் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக எழுதி வருகிறேன். என்னுடைய முதல் கதையை எழுதும் போது எனக்கு 17 வயது இருக்கும். ஆனால், அதனை நான் மின்னச்சேற்றியது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தான் பின்னர் சில காரணங்களால் அதுவும் முடியாமல் போய்விட்டது.ஐயையில் இணைந்த பிறகுதான், என்னுடைய திறமை வெளியுலகம் ஏன் என்னுடைய குடும்பம், சுற்றத்தாரே அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. பணி ரீதியாக நான் பயணிக்கும் போது, திறமையிருந்தும் வறுமையினாலோ அல்லது தகுந்த வாய்ப்பு கிடைக்காமலும் உள்ள திறனாளிகளை கண்டறிந்து ஐயை குழுவின் உதவியோடு அவர்களை இந்த உலகம் அறிய வகை செய்யவேண்டுமென்பதே என் அவா.

**தொடர்ந்து எதை நோக்கிய பயணமாக உங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டுள்ளீர்கள்? அதற்குநீங்கள் பெண் என்றளவில் உங்கள் குடும்பம் உங்களுக்கு துணை நிற்கிறதா?**

பள்ளிவயதில் பெண் என்பதால் சில கலைகளில் ஈடுபாடு செலுத்த மறுக்கப்பட்டேன். எத்தனையோ முறை வீட்டுக்கு தெரியாமல் பல்வேறு போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். நடனம், இசை, கவிதை,

பேச்சு, கட்டுரை என எல்லாவற்றிலும் பங்கேற்றுள்ளேன்.வெற்றியோ தோல்வியோ எனக்கு அதுபற்றி கவலையில்லை எனக்கு பங்களிக்கவேண்டும்.பெரும்பாலும் முதல் அல்லது இரண்டாம் பரிசே கிட்டும். வீட்டில் மகிழ்ச்சியாய் பகிர்ந்துகொள்ள கூட முடியாது.

உண்மையை சொல்ல வேண்டு மென்றால், ஒரு முழு சுதந்திரத்தை என் திருமணத்திற்கு பிறகே நான் அனுபவிக்கிறேன். என்னுடைய எழுத்துக்காக வும், பேச்சுக்காகவும் பிறர் என்னை பாராட்டும்போது என்னைவிட என் கணவருக்கே பெருமை; அதுவே எனக்கு ரெட்டிப்பு மகிழ்ச்சி. ஏதேனும் ஒரு நிகழ்ச்சி/மேடை என்றால், என்னை விட அவர் குதூகலமாகிவிடுவார். குழந்தையை பள்ளிக்கு தயார் செய்தும் அனுப்பும் பரபரப்போடும், ஆர்வத்தோடும் இருப்பார். கூடுமானவரை எல்லா நிகழ்வுகளுக்கும், முதல்வரிசையில் அமர்ந்து ரசித்து, பின்னர் அதில் இருந்த நிறைகுறைகளை சொல்லுவார். அவரின் உறுதுணையோடு இன்னும் நிறைய எழுதுவேன், நிறைய புத்தகங்கள் வெளியிட வேண்டும், நிறைய உலக மேடைகளில் பேசுவேன், சிகரங்களை தொடுவேன்.

### ஆப்ரிக்கா தமிழ்ச்சாரல் ஆசிரியர் குழுவின் அங்கமாக செயல்படுகி றீர்கள். அவ்விதழ் குறித்து அறிமுகம் செய்யுங்கள்...

ஆப்ரிக்காவில் எனது பயணங்கள் மற்றும் அங்குள்ள பழங்குடி மக்களின் நட்பு என்னுள் ஒரு தேடலை உருவாக்கி இருந்தது. அந்த தேடலின் விளைவே காங்கோ தமிழ்ச்சாரல் இதழில் வெளியாகிவரும் என்னுடைய ஆப்ரிக்காவும் ஆதிதமிழனும் என்கிற ஆய்வுக் கட்டுரை. கட்டுரை வெளிவந்து கொண்டிருந்த சிலமாதங்களிலேயே, அய்யா. திரு. ஒரிசா பாலு அவர்களால்நிறுவப்பட்டுஒருங்கிணைக்கப்பட்ட கடலோடி தமிழர்களுக்கான தென்புலத்தார் குழு சார்பாக குறிப்பாக, ஆப்ரிக்க வாழ் தமிழ்சமூகத்திற்க்காக ஒரு பல்சுவை இதழ் வெளியிட திட்டமிடப்பட்டது. அதன்படி, ஆப்ரிக்க கண்டத்தில் பல்வேறு நாடுகளில்



கங்கை கொண்ட சோழபுரத்தில் கல்வெட்டு செய்திகளையும், சிற்பங்களையும் பார்வையிடும் போது



கணவர் அருளுடன்

வசிக்கும் தமிழர்கள் மற்றும் தமிழ்ச்சங்கங்களின் நிகழ்வுகள் பற்றிய சிறப்பு செய்திகள், தமிழர்களின் படைப்புகள் வெளியாகும் ஒரு இதழ் வடிவமைக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 14 மற்றும் 15 திகதிகளில் வேலூர் தொழில் நுட்ப கல்லூரியில் நடைபெற்ற “உலகத்தமிழ் உயராய்வு மாநாட்டில்” தமிழ் தேசிய இயக்க தலைவரும் முதுபெரும் தமிழ் போராளியுமான அய்யா.திரு. பழநெடுமாறன் அவர்களால் வெளியிடபட்டது.தற்போது இருமாதங்களுக்கு ஒருமுறை வெளியாக இருக்கும் இந்த இதழ், பின்னாளில் மாதமொரு இதழாக வெளியிட திட்டமிட்டுள்ளோம்.

வேறு எதை சார்ந்து இயங்கி கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் எங்களோடு பகிர்ந்து கொள்ளலாமே....

என்னுடைய ஆப்ரிக்காவும் ஆதிதமிழனும் ஆய்வு தொடருக்காக ஆரம்பித்த என் தேடல் இப்போது தமிழ் வரலாறு சார்ந்த தேடலாக உருவெடுத்து வருகிறது. மூதமிழ் தரவுகளை தேடி ஒரு உலகளாவிய பயணம் மேற்கொள்ளவேண்டும்.

சமூகப்பணியில் சாதித்ததாக எதைக் கருதுகிறீர்கள்?

ஒரு பெண்ணாக, மற்றொரு பெண்ணின் வெற்றியை கொண்டாடுவதையே இது வரை சமூகபணியில்சாதித்ததாககருதுகிறேன்.நான் சென்னையில் பணிபுரிந்து கொண்டிருந்த போது, கடின ஜீவனத்தில் இருந்த தையல் பயிற்சி பெற்றிருந்த ஒரு சகோதரிக்கு, குழுவில் இணைத்து தொழில்முனைவோர் பயிற்சி அளித்து கடனும் பெற்றுத்தந்தேன். முதலில் வீட்டிலேயே தையல்கடை வைத்திருந்த அவர், அவரும் அவர் கணவரும், இரு வருடங்களில் பத்து எந்திரங்கள் வாங்கி அவர் போன்று வறிய பெண்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை பணிக்கமர்த்தி, ஆடை வடிவமைப்பு தொழிற்சாலை ஒன்றில் தொடர்ந்து ஆர்டர் எடுத்து முதலாளியாக உருவெடுத்தார். மேலும், உத்திரமேரூர் அருகே சுயஉதவி குழு என்றாலே கடன் வாங்குவது, கடன் செலுத்துவது என்று இருந்த சில பெண்களுக்கு தொழில்முனைவு பயிற்சி அளித்து, அவர்கள் குழுவாக உணவு விடுதி ஒன்றை தொடங்கி நடத்த உதவி ஊக்குவித்தது, ஒரு குழுவினரை கறவை மாடுகள் வாங்கி பால்பண்ணை அமைக்க கடன்பெற்றுத்தந்து பின்னாளில் அதே குழு ஊர் முழுவதும் பால் எடுத்து ஒரு பெரிய பால் நிறுவனத்திற்கு விநியோகம் செய்தது. தான்சானியாவில் வேலை செய்த போது, தரிசாக கிடந்த அரசு நிலத்தை ஒடுக்கப்பட்ட பெண்களுக்காக அரசாங்கத்திடம் விண்ணப் பித்து குத்தகைக்காய் பெற்றுத் தந்து; அதில்

அவர்கள் பயிர் செய்ய இலவச விதைகள், உரங்கள் போன்றவை பெற்று தந்து அவர்களை ஊக்கப்படுத்தி தேசிய அளவில் நடைபெற்ற நிகழ்வில் அந்த குழுவினர் பரிசு பெற்றது. மாற்றுத்திறனாளி ஒருவருக்கு, சில இந்திய நிறுவனங்கள் துணையோடு மூவுருளி வாங்க உதவி செய்து அவருடைய வாழ்வாதாரத்திற்கு உதவியது என ஒரு சிலரது வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்களே எனது வெற்றிகள்.

### தமிழ்ச்சங்கம் மற்றும் அதை சார்ந்த பணிகள்..

2013ல் தான்சானியா தமிழ் சங்கத்தில் அடிப்படை உறுப்பினரான நான், 2016-17ல் தான்சானியா தமிழ்சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக இருந்துள்ளேன். தமிழின் மீது இருந்த ஆர்வத்தினாலும், பற்றினாலும் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குதல், பட்டிமன்ற பேச்சு, நிகழ்ச்சிக்கு தொகுப்புரைகள் எழுதுதல் என என்னை ஈடுபடுத்திக்கொண்டேன்.

### எழுத்தின் மீதும், தமிழின் மீதும் அளவற்றபற்றுகொண்டிருக்கிறீர்கள்.. மகிழ்ச்சி எப்படி எழுத்து ஆர்வம் ஏற்பட்டது என்பது பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.

தமிழ் பிழை இல்லாமல் எழுத படிக்க தெரிந்தால் மட்டுமே எழுதுவதில் ஆர்வம் வரும். அதற்கு வித்திட்டவர் எனது பெரியப்பா. ஆரம்பக்கல்வி ஆங்கிலவழிக்கல்வி என்பதால் தமிழ் நான் எழுத படிக்க தெரியாமல் இருந்து விடக்கூடாதென்று எனக்கு பல்வேறு பயிற்சிகள் அளித்தார். அதிகாலை 4 மணிக்கு எல்லாம் எழுப்பி பாடம் சொல்லித்தருவார். நான் மூன்றாம் வகுப்பு படிக்கும் போதே செய்தித்தாள் படிக்கும் பழக்கத்தை உருவாக்கி பிழையில்லாமல் சத்தம் போட்டு படிக்கச்சொல்வார். அப்போதே அகராதி எப்படி பயன்படுத்துவது என்று சொல்லி கொடுத்தார். நடுநிலைக்கல்விக்காக தமிழ்வழி பள்ளிக்கு மாற்றப்பட்டபொழுது ஆங்கில வழிக்கல்வியில் படித்திருந்தாலும், தமிழில் நான் பிழையில்லாமல் பேசுவது கண்டு பேச்சு போட்டியிலும், கட்டுரை போட்டியிலும் கலந்து கொள்ள எனது ஆசிரியர்கள் ஊக்குவித்தார்கள். குறிப்பாக எனது மேல்நிலைக்கல்வி தமிழாசிரியை திருமதி. ராணி முருகேசன் கவிதைகள் எழுதுவதற்கு என்னை ஊக்குவித்தார். இப்படியாகத்தான் எனது எழுத்தார்வம் ஆரம்பித்தது. தமிழின் மீதும், தமிழ் இலக்கியத்தின் மீதும் பற்று ஏற்பட காரணம் எழுத்தாளர் கல்கி அவர்களின் பொன்னியின் செல்வன். பொன்னியின் செல்வன் படித்தபிறகு தமிழ் வரலாறு பேசும் இலக்கியங்களை தேடிப்படித்தேன். இப்படித்தான் இலக்கியத்தில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது.

### மறக்க முடியாத சம்பவங்கள்...

பணி ரீதியாக மறக்கமுடியாத சம்பவம் என்று சொன்னால், ஆப்பிரிக்காவில் ஒருசமயம் குழந்தை தொழிலாளர்கள் மற்றும் கடத்தப்படும் குழந்தைகளின் மீட்பு மற்றும் மறுவாழ்வு போன்ற பணிகளை உள்ளடக்கிய நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.




முதல் அச்சுக்கூடமான தரங்கம்பாடி சீகன் பால்கு அச்சுக்கூடத்திற்கு முன்பு

வழக்கமாகஅண்டைநாடுகளிலிருந்துவரும் பேருந்துகளுக்கான பேருந்து நிலையத்தில் எப்பொழுதுமே குழந்தை தொழிலாளர்கள், வீட்டிலிருந்து ஓடி வரும் குழந்தைகள், கடத்தப்படும் குழந்தைகள் இவர்களை மீட்கும் பணி இருக்கும். கடத்தப்படும் குழந்தைகள் என்றால் திரைப்படங்களில் வருவது போல கன்டெய்னர்களில் கடத்தப்படுவது கிடையாது. ஆப்பிரிக்க நாடுகளில் பொதுவாக நோயின் காரணமாகவோ, இல்லை உடைந்த குடும்ப சூழ்நிலையின் காரணமாகவோ குழந்தைகள் பெற்றோரிடமிருந்து பிரிந்து தாத்தா பாட்டியிடம் இருப்பார்கள் அல்லது தகப்பனை பிரிந்து தாயிடமும், தாயைப் பிரிந்த தகப்பன் இடமும் இருப்பார்கள். இவ்வாறு இருக்கும் சூழலில் அவர்களுடைய பெற்றோர்கள் யாராவது இறந்துவிட்டார்கள் என்றால் அவர்களின் வயதான பாட்டி அல்லது தாத்தாவினால் அவர்களைப் பார்த்துக்கொள்ள இயலாது.

நகரத்தில் அவர்களுடைய உறவினர்கள் யாராவது இருந்தால் அவர்களிடம் படிக்க வைக்க உதவி கோரியோ அல்லது பணிக்காகவோ சேர்த்து விடுவார்கள். இவ்வாறு வரும் குழந்தைகள் சில சமயம் யாரேனும்தெரிந்தஉறவினர்கள்மூலமாகவோ அல்லதுயாரேனும்இடைத்தரகர்மூலமாகவோ கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு கொண்டு வரப்படுவார்கள். முதலில் நன்றாக கவனித்துக் கொள்ளும் உறவினர்கள் ஒரு சிறிய சம்பளமும், மூன்று வேளை உணவும் அளித்து வருவார்கள். பின்னர் போகப் போக இரு வேளை சாப்பாடு அல்லது ஒரு வேளை சாப்பாடு என்று குறைந்து சம்பளம் ஏதும் கொடுக்காமல்பின்னர்அவர்களேஅடிக்கவும் ஆரம்பித்துவிடுவார்கள். இவ்வாறான குழந்தைகள் அந்த இடத்திலிருந்து தப்பித்து, அவர்களுடைய சொந்த ஊருக்கு செல்லும் பொழுது, பேருந்து நிலையத்தில் சுற்றி தெரியும் இடைத் தரகர்களிடம் மாட்டிக்கொள்வார்கள். பின்னர் இவர்கள் வேறு ஏதாவது ஒரு இடத்திற்கு அழைத்து சென்று அங்கும் கொடுமை தொடரும். இப்படித்தான் இவர்கள் உறவினர்கள் மூலமாகவே கடத்த ப்படுவார்கள். அவ்வாறு ஒரு சமயம் நானும், எனது குழுவினரும் பேருந்து நிலையத்தில் அவ்வாறு யாரேனும் குழந்தைகள்தட்டுபடுகிறார்களா என்று சுற்றி வரும்பொழுது ஒரு பெண் குழந்தை தனியாக நின்று கொண்டிருந்தார் 13 வயது இருக்கும். அவளிடம் அணுகி மெதுவாகப் பேச்சுக் கொடுத்த பொழுது, தான் தனது மாமாவுடன் வந்து இருப்பதாகவும் தனது சித்தி வீட்டிற்கு செல்ல இருப்பதாகவும் கூறினார். நாங்கள் வெகு நேரம் காத்திருந்து அவருடைய மாமா வருகிறாரா என்று பார்த்தோம் அவர் ஒரு இடைத்தரகர் போலும், நாங்கள் இம்மாதிரியான குழந்தைகளை மீட்பவர்கள் என்று அவருக்கு தெரிந்திருக்கிறது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் கல்வெட்டு செய்திகளையும், சிற்பங்களையும் பார்வையிடும் போது



தூரத்திலிருந்தே எங்களைப் பார்த்து விட்டு எங்கோ ஓடி ஒளிந்து விட்டார். அந்த குழந்தைக்கு கிராமத்தில் ஒரே ஒரு பாட்டி மட்டும்இருக்கிறார்.அப்பாஅம்மாஇருவருமே ஹெச்.ஐ.வி தாக்கத்தால் இறந்துவிட்டார்கள். அவளுக்கு அவருடைய பாட்டி வீட்டிற்கு திரும்ப போக விருப்பமில்லை, நாங்கள் இது மாதிரி பேசிக் கொண்டிருப்பதை பார்த்து, சிறிது நேரம் கழித்து மற்ற இடைத்தரகர்களுடன் வந்த அவருடைய உறவினர் எங்களுடன் சண்டைக்கு வந்துவிட்டார். பொதுமக்களும் கூடிவிட்டனர். பொதுமக்களிடம் நாங்கள்தான் குழந்தையை கடத்த வந்திருக்கிறோம் என்று சொல்லிவிட அவர்களும் எங்களுடன் சண்டை போட்டனர். வழக்கமாக எப்பொழுதும் எங்களுடன் ஒரு காவல்காரர் வருவது வழக்கம் அன்று அவர் எங்கோ டிராபிக்கில் மாட்டிக்கொண்டார். பின்னர் அவர் வந்து நாங்கள் குழந்தையை கடத்தவில்லை நாங்கள் மீட்டு சென்று குழந்தையை படிக்க வைக்கவே வந்திருக்கிறோம் என்பதே எல்லோருக்கும் எடுத்து சொன்ன பிறகுதான் எங்களை விட்டார்கள். இது ஒரு மறக்க முடியாத சம்பவம்.

அதன்பிறகு 2016ல் இந்திய வணிக பேரவையில் பணியாற்றி விலகி பின் அதே அவையின், துணை செயற்குழுவில் செயலாளராக பொறுப்பளிக்கப்பட்டிருந்தேன். அச்சமயம், இந்திய பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் தான்சானியாவிற்கு வந்திருந்தார். இதன்பொருட்டு, தான்சானியாவில் உள்ள மற்ற முதலீடு சார்ந்த அரசு நிறுவனங்களோடும், அமைச்சகத்தோடும் இணைந்து இந்தியப் பிரதமரின் வருகை சார்ந்த நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தினேன். இதுவும் ஒரு மறக்க முடியாத சம்பவம்.

### உங்களுடைய இலக்கு, திட்டங்கள் அல்லது எதிர்கால ஆசை....

விருப்பட்டபடியே கலைத்துறையில் பங்களித்துவருகிறேன். எதிர்காலத்தில் ஒரு சிறிய வணிகம் செய்யவேண்டும், கிடைக்கும்



கஜா புயலுக்கு தான்சானியா தமிழ்ச்சங்கம் மற்றும் எங்கள் லாஜினி சார்பாக பள்ளிமாணவர்களுக்கு சூரியஒளிவிளக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று பழவகை மரக்கன்றுகளும் கொடுத்தபோது

லாபத்தில் கைப்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் குழந்தைகளுக்கு உதவும் பொருட்டு எனது பாட்டியின் நினைவில் ஒரு கல்வி அறக்கட்டளை ஏற்படுத்த வேண்டும். தற்போது, சூழலியல் சார்ந்த திட்டம் ஒன்றும் முனைப்பில் உள்ளது. அதைவடிவம் பெறச்செய்து சூழலியல் சார்ந்த பங்களிப்பை இந்த சமூகத்திற்கு வழங்கவேண்டும்.

### இளையதலைமுறை பெண்களுக்கு தாங்கள் சொல்லவிரும்புவது...

மற்றவருடைய கேலி கிண்டல் இவற்றை புறந்தள்ளுங்கள், உங்களை கேலி செய்பவர் உங்கள் முன்னால் இருக்க மாட்டார்கள், உங்கள் பின்னால் தான் இருப்பார்கள். அவர்களுடைய வார்த்தைகளுக்கு நீங்கள் செவிமடுத்தால் நீங்களும் அவருடன் பின் தங்கிவிடுவீர்கள். செவிமடுக்காது இருந்தீர்களேயானால், அவரை தாண்டி முன்னேறி செல்வீர்கள். கற்பதற்கும், சாதிப்பதற்கும் வயதோ, உயரமோ, உருவமோ ஒருதடையே இல்லை. எப்போதும் ஒரு தேடல் இருந்து கொண்டே இருக்கவேண்டும். தேடல் இல்லாமலும் எதிலும் ஆர்வம் இல்லாமலும் வெறுமனே பொழுதை கழிப்பவர் சவத்திற்கு ஒப்பாவார். இயன்றவரை ஒருவருக்கொருவர் உதவி செய்ய பழகுங்கள்... நாளை நமதே

நாளை நமதே



# தமிழரின் வரலாறு - கீழடியில்

அகழ்ந்தாய்ந்து அறிந்தெடுத்த உண்மைதானே இன்று
அகழ்வாய்வு கீழடியில் உரைப்பதெல்லாம் பாரு!
புகழ்பேசும் தமிழரின வரலாறுச் சொல்லும்
புவியாண்ட பெருமையினம் தமிழரின மென்று!
இகழ்திட்ட வடவரே சொல்லுவதைக் கேளும்
ஈடற்ற இனந்தானே தமிழரினம் என்றும்!
அகழ்ந்திடுவாய் உன்னிலத்தை அதில்காண்பாய் எங்கள்
பைந்தமிழன் முதுகெலும்பும், உறைவிடமும் இன்றே!

உன்பிறப்பும் எந்தமிழன் கால்வழியென் றாகும்
உன்மொழியும் ஆதியிலே தமிழென்றே கூறும்
பின்வந்தக் கூட்டத்தால் திசைமாறிப் போனீர்
பிழைக்கவந்த மொழியினையேன் புகுத்துகின்றீர் எம்முள்
தன்னிறைவை யடைந்திட்டே அரியணையில் எங்கள்
தமிழ்மொழியும் அமர்ந்திட்டப் பெருமையினைக் கேளும்
என்றென்றும் எந்நாடும் தமிழராண்ட நாடே
ஏற்றமிகு இனம்,மொழியும் தமிழென்றே பாடு!

- பைந்தமிழ்ப்பாமணி

**பாவரசு கவின்முருகு**



# கழுகுமலை வெட்டுவான் கோயில் பாண்டியர்கள் செதுக்கிய அதிசயம்

கழுகுமலையின் சிறப்பு, அந்த மலையின் பின்புறம் அமைந்து உள்ள 'வெட்டுவான் கோயில்' ஆகும். மலையின் ஒரு பகுதியில் பாறையை வெட்டி, அந்த ஒற்றைப் பாறையிலேயே ஒரு கோயிலைச் செதுக்கி இருக்கிறார்கள். அதுதான், 'வெட்டுவான் கோயில்' என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய கோயில், தமிழகத்திலேயே இது ஒன்றுதான் என்பதுவே, கழுகுமலையின் மாபெரும் சிறப்பு ஆகும். இந்தியாவிலேயே கழுகுமலையைத் தவிர, மராட்டிய மாநிலம் எல்லோராவில் உள்ள கைலாசநாதர் கோவில் மட்டுமே, மலைக் குடைவரைக் கோயில் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கரன்கோவில் - கோவில்பட்டி சாலையில், இரு நகரங்களுக்கும் நடுவே அமைந்து உள்ளது கழுகுமலை பேரூர். மலையின் பின்பகுதியில் உள்ள படிக்கட்டுகளின் வழியாக மேலே ஏறினால், பதினைந்து இருபது நிமிடங்களுக்கு உள்ளாக ஏறி விடலாம். மலையின் நடுவே ஓரிடத்தில், வரிசையாகப் பல சிலைகள் செதுக்கப்பட்டு உள்ளன. சமணர்கள், தங்கள் குரு, தாய், தந்தை ஆகியோரின் நினைவாக, இங்கே சமண தீர்த்தங்கரர்களின் சிலைகளைச் செதுக்கி உள்ளனர். இச்சிற்பங்களின் கீழே, அவற்றைச் செதுக்கியவர்களின் பெயர்கள் தமிழ் வட்டு எழுத்துகளில் பொறிக்கப்பட்டு உள்ளன. சிறுசிறு குகைகளும் உள்ளன.

அங்கே அமைந்து இருந்த சமணர் பள்ளிகளில், சமண மதக் கருத்துகளைப் போதித்தனர். வெட்டுவான் கோயில், ஒரே கல்லில் செதுக்கப்பட்டு உள்ளது (Monolithic). கழுகுமலையின் ஒரு பகுதியில், 7.50 மீட்டர் ஆழத்துக்குச் சதுரமாக வெட்டி எடுத்து, அதன்

நடுப்பகுதியைக் கோவிலாகச் செதுக்கி உள்ளனர். ஆனால் அந்தக் கோவிலின் பணி முழுமையாக நிறைவு பெறவில்லை. இதில், கரு அறையும், அர்த்த மண்டபமும் உள்ளன. கோவில் கோபுரத்தில், உமா மகேசுவரர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரம்மா வடிவங்கள் காணப்படுகின்றன. விமானத்தின் மேற்குத்திசையில் நரசிம்மரும், வடக்கில் பிரம்மனும் காட்சி தருகின்றனர்.

விமானத்தின் நான்கு மூலைகளில் நந்தி சிலைகளும், இவற்றுக்குக் கீழே யாளி வரிகளும், கபோதகமும் உள்ளன. பராந்தக நெடுஞ்சடையன் என்ற மன்னனின் காலத்தில், கழுகுமலையில் சிற்பங்களைச் செதுக்கி இருக்கிறார்கள். கழுகுமலையில், மூன்று நினைவுச் சின்னங்கள் உள்ளன. 1. சமணர் பள்ளி 2. வெட்டுவான் கோயில் 3. முருகன் கோவில். மலையின் பழம்பெயர் 'அரைமலை'. இன்றைய பெயர் 'கழுகுமலை'. ஊரின் பழம்பெயர்: பெருநெச்சுறம் அல்லது திருநெச்சுறம். நாட்டுப் பிரிவு: இராஜராஜப்பாண்டி நாட்டு, முடிகொண்ட சோழவளநாட்டு, நெச்சுற நாட்டு நெச்சுறம்.

ஊரில் குறிக்கப்பட்டு உள்ள அரசர்கள்:
1. பாண்டியன் மாறஞ்சடையன் (பராந்தக நெடுஞ்சடையன்)
2. பாண்டியன் மாறஞ்சடையன் (பராந்தக வீரநாராயணன்).

கழுகுமலையின் அடிவாரத்தில் பாலசுப்பிரமணியர் திருக்கோயில் உள்ளது. இதன் மூலவர் இருக்கின்ற இடமும் ஒரு குடைவரைதான். இந்தக் கோவிலின் தெப்பக் குளத்தில், பால் போன்ற நிறத்தில் நல்ல குடிநீர் கிடைக்கிறது. அதுதான், இந்த ஊர் மக்களின் குடிநீராக, அண்மைக்காலம் வரையிலும் பயன்பட்டு வந்தது. எனவே, அந்தக் குளத்தைத் தூய்மையாகப் பராமரித்து வருகிறார்கள். இப்போது, தாமிரபரணி ஆற்றில் இருந்து குடிநீர் கொண்டு வருகிற திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

வெட்டுவான் கோவில் குறித்து, அந்தப் பகுதி மக்களிடையே பல கதைகள் உலா வருகின்றன. அவற்றையெல்லாம் தேடிச் சேகரித்து எழுதினால், மேலும் பல செய்திகள் பதிவு ஆகலாம்; இந்தப் பணியை, தமிழ் ஆசிரியர்கள், இலக்கியவாதிகள், கழுகுமலை இளைஞர்கள் செய்ய வேண்டும்!

**- மலைச்சாமி சின்னா**

# இல்லாத இடுப்பைத்தேடி

தண்ணீர் குமெடுத்து
தவிக்கவிட்டு போறவளே
எண்ணிக்கை மாறாமல்
எப்பமுத்தம்தரபோற
கண்ணச்சிரிப்பு என்னை
காத்திருக்க சொல்லுதடி
எட்டுகல்லு மூக்குத்தியும்
முத்தமிட தடுக்குதடி
கன்னத்தில் முத்தமிட
வட்டமடிக்குதடி என்மனசு
ஏரிக்கரையில் காத்திருப்பேன்
ஏங்கவிடாதடி விடலயடி
கண்டாங்கி சேலவிலகி
கட்டழகு தெரியுதடி
கழனிப்பக்கம் வாடிபுள்ள
சல்லிக்கட்ட வச்சிக்கலாம்
வாடகாத்து நோகுதடி
வாகாக அணைச்சிகிட்டா
வாராதோ சொர்க்கமடி
இல்லாத இடுப்பைத்தேடி
இளமனசு அலபாயுதடி
சிரிப்பெல்லாம் போதுமடி
இழுத்தணைக்க வாடிபுள்ள..

**சி.அழகிரி**

# புலிப்பத்து

## உறுமு புலியே உறுமு

சிறுமைக் குணங்கொண்டு சீறுவர் நாளும்
இறுமாப் புடன்வாழ்வர் இன்னல் தருவர்
நறுந்தேன் தடவி நரைத்தவர் ஓட
உறுமு புலியே உறுமு

இன்னும் வரமறுப்பர் இக்காலம் கண்டுணரார்
சின்ன அறிவுடையர் சீறுவர் பூனையராய்
வறுமைக் குணங்கொண்ட வள்ளலவர் ஓட
உறுமு புலியே உறுமு

புரியா எழுத்துகள் போட்டெழுதிக் காட்டித்
தெரியா உலகில் திளைத்துக் களிப்பர்
கறுத்த மனமுடைய கள்ளரவ ரோட
உறுமு புலியே உறுமு

வாய்ச்சவாலிட்டென்றும் வம்பிழுத்து நம்மொழியை
ஆய்ந்தறிந்தும் உள்ளம் அழுக்காய்த் திரிவர்
வெறுப்பைச் சுமப்பதால் வீணாவ ரென்றே
உறுமு புலியே உறுமு

அறிவிற் சிறந்தும் அறிவிலராய் வாழ்வர்
செறிவைச் சிதைத்துச் சினப்பர் உருவில்
சிறுவரென வாகிச் செருக்கிழப்ப ரென்றே
உறுமு புலியே உறுமு

எல்லாம் தெரிந்திருந்தும் ஏய்த்துப் பிழைப்பராம்
வல்லர் எனநடித்து வம்பிழுப்பர் பொல்லார்
குறுகிய எண்ணத்தால் கூனுவ ரென்றே
உறுமு புலியே உறுமு

சேவை அளித்துச் சிறக்கின்ற தோற்றத்தால்
நாவை அடக்காது நாமகளின் பேர்சொல்லி
இறுகிய உள்ளத்தால் இன்னல் இழைப்பரென்று
உறுமு புலியே உறுமு


ஆள்வைத்துச் சேர்ப்பர் அடிமடியில் கைவைப்பர்
கோள்சொல்லிப் பேசிக் கொடுஞ்செயல் செய்வர்
பொறுத்தார் ஒருநாளில் பொங்கியெழு வாரென்று
உறுமு புலியே உறுமு

ஆசு கவியென்பர் ஆசு நிறைந்திருப்பர்
பேசுங் கவியில் பெருங்குற்றம் கண்டும்
நிறுத்திக் கருத்துரைப்பர் நீள்வாய ரென்றே
உறுமு புலியே உறுமு

கற்றநற் கல்வியைக் காசினி வாழ்மக்கள்
பெற்றுய்ய நல்வழி காட்டி மகிழ்ந்து
சிறப்புற உள்ளச் செருக்கழிப்போம் என்றே
உறுமு புலியே உறுமு.

**இராம வேல்முருகன்**
வலங்கைமான்






நூல் :
**மாறியது நெஞ்சம்**

ஆசிரியர் :
**நந்து சுந்து** (எஸ்.நந்தகுமார்)

பதிப்பு :
**பாவைமதி**

பக்கம் : 96 விலை: 70

நூல் விமர்சனம் :
**பா.சக்திவேல்,**
கோயம்புத்தூர்

தமிழில் வெளிவரும் முன்னணி பத்திரிக்கைகளில் தொடர்ந்து 48 ஆண்டுகால எழுத்தனுபவம் கொண்ட ஒரு பழுத்த எழுத்தாளர், சிறுகதைப் படைப்புகளில் சிகரம் தொட்ட சிறந்த கதையாசிரியர் திரு. நந்து சுந்து அவர்கள் முதன்முதலாக தாம் எழுதிய சில கதைகளைத் தொகுத்து «மாறியது நெஞ்சம்» என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார்.

கேலியும் கிண்டலுமாய் இவரது கதைகள் வாசிப்போரின் மனதை லேசாக்கும் மந்திரம் கற்றவை. ஆனால் இந்தத் தொகுப்பில் எதார்த்தமும், பொறுப்பும், பாசமும், நம்பிக்கையும், மழலைகளின் நிர்மலமான எண்ணங்களும் உணர்வுகளும், உண்மைக் காதலின் சக பரிமாற்றங்களும், தொழில் நேசிப்போரின் மன ஓட்டமும், தன்னம்பிக்கைத் துளிரின் துணிவும், சமகால வாழ்க்கை முறையில் உறவுப் பரிமாற்றங்களின் உறுத்தல்களுமாய் வாழ்வின் நிதர்சனங்களை இழைத்துக் கொடுத்திருக்கிறார் நேர்த்தியாக.

இவர் கதையின் சிறப்பம்சங்கள் நேர்மறை எண்ணங்களை விதைப்பது, தகாத செயல் புரிவோரை தனக்கே உரிய பாணியில் அடையாளம் காட்டுவது, யாரும் கண்டு கொள்ளாமல் விட்டுவிடும் காட்சிகளை மிக லாவகமாக பதிவிடுவது, கதை முடிவில் கருத்தைப் பொருத்துவது போன்றவை கதை ஆசிரியருக்கு கைவந்த கலையாகும். உலக அளவிலும், தேசிய, மாநில அளவிலும் நிகழ்ந்த பல சிறுகதைப் போட்டிகளில் பரிசு வென்ற வீச்சு மிகுந்த சாதனையாளர். மத்திய அரசுப் பணியில் இருந்த போதும், ஓய்வுக்குப் பிறகும் ஓய்வின்றி எழுதிக் கொண்டிருப்பவர். தொய்வின்றி விரும்பி வாசிக்க வைக்கும் வசியம் கற்ற, வாசகரின் மனக் கண்களுக்கு வார்த்தைகளால் காட்சிகளை மெல்ல மெல்ல சுவைப்பட நகர்த்தும் வல்லமை கொண்ட கெட்டிக்காரர். வாசிப்புப் பழக்கத்தை மீட்டெடுக்க விரும்புவோரும், சிறுகதை ஆர்வலர்களும் கட்டாயம் வாங்க வேண்டிய புத்தகம். பரிசளிப்பதற்கும் தகுதியான புத்தகம். கதைக்குள் நான் செல்லாததற்கு காரணம் அவை வாசகர்கள் ஒன்றிப் படிக்க வேண்டியவை என்பதால். தற்கால புதிய எழுத்தாளர்களுக்கு இவர் ஒரு முன் மாதிரி.

# பொண்ணு பிடிச்சிருக்கு

## மலர்மதி



இதுவரை கிருஷ்ணராஜுக்கு பத்து இடங்களில் பொண்ணு பார்த்தாகி விட்டது. இதுவரை ஒன்றுகூட அவனுக்குப் பிடிக்க வில்லை.

அப்பா அழகுசுந்தரமும், அம்மா அலமேலு வும் சோர்ந்துபோயினர்.

“இங்கே பாருப்பா, உனக்கு எப்படிப் பட்ட பொண்ணுதான் பிடிக்கும்? விவரமாச் சொல்லிடு. அதுக்கு ஏத்தமாதிரி பார்க்கச் சொல்லி தரகர்கிட்ட சொல்றேன். சும்மா இப்படி காலத்தை ஓட்டிக்கிட்டு இருந்தா எப்படி?” என்று கேட்டார் அழகுசுந்தரம்.

கிருஷ்ணராஜ் ஒன்றும் பேசாது மவுன மாய் தரை பார்த்து அமர்ந்திருந்தான்.

“நீ வேறு யாரையாவது விரும்புறீயா?” என்று அப்பா கேட்டதும், ‘சரே’லென நிமிர்ந்தான்.

“சேச்சே.. அப்படியெல்லாம் ஒண்ணு மில்லை.” என்று அவசரமாய் மறுத்தான்.

“பின்னே எப்படிப்பட்டப் பொண்ணை எதிர்பார்க்கிறே? தெளிவாச் சொன்னாத் தானே அதுக்கு ஏத்தாப்ல பார்க்க முடியும்? கண்ட, கண்ட இடத்துக்குப் போய் நேரத்தை வீணாக்கறது மட்டுமில்லாம

அவங்க வீட்டு பலகாரங்களைச் சாப்பிட்டு அநாவசியமா அவங்களுக்குச் செலவு வைக்கலாமா?” என்று எகிறினார் அழகுசுந்தரம்.

“அட, செலவை விட்டுத் தள்ளுங்க. ஒவ்வொரு பொண்ணு மனசுலயும் ஆசையை விதைச்சிட்டு வர்ற பாவத்தை இல்ல இவன் செஞ்சுக்கிட்டு இருக்கான்?” என்று இடைபுகுந்தாள் அலமேலு.

“வாலாஜா பொண்ணு பி.எஸ்.ஸி., படிச்சிருக்கா. அவ அப்பாவுக்கு ஏகப்பட்ட நில புலங்கள். நல்ல வசதியான இடம். அதை போய் நிராகரிச்சுட்டான்.”

“அதை விடுங்க. ராணிப்பேட்டையில பார்த்தபொண்ணுக்குஎன்ன குறைங்கறேன்? சொந்த வீடு, நாலு ஏக்கறா நிலத்துக்கு அவ ஒருத்திதான் வாரிசு. அதை வேண்டாம்னு சொல்லிட்டான்.”

“ஏன் ஆற்காட்ல பார்த்த பொண்ணு எந்த விதத்துல குறைஞ்சிருந்தா? பங்களா டைப்புல எவ்வளவு பெரிய வீடு? இவனுக்கு ஒரு பைக்கும், பொண்ணு பேருக்கு அந்த வீட்டையும், ஐம்பது பவுன் நகை, ஏராளமான சீர் செய்ய ரெடியா இருந்தாங்க. இன்னும் என்னென்ன தேவைன்னு வேறு கேட்டாங்க. அதையாவது ஒப்புக் கிட்டானா?”

இப்படி அப்பாவும், அம்மாவும் மாறி, மாறி அவன் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கி தங்கள் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தனர்.

கடைசியாக, “இதோ பாரு கிருஷ்ணா... எங்ககிட்ட சொல்லக் கூச்சமா இருந்தா, நீ ஒரு காரியம் செய். தரகர் பக்கத்துத் தெருவிலதான் இருக்கார். நீயாகவே போய் அவர்கிட்ட உனக்கு எப்பேர்ப்பட்ட பொண்ணு தேவைங்கறதைச் சொல்லிட்டு வந்துடு. போ... இந்த வீட்டுக்கு விளக்கு ஏத்த ஒரு மருமக வந்தா சரி.” என்றார் அழகுசுந்தரம்.

சந்தோஷமாய்புறப்பட்டான்கிருஷ்ணராஜ்.

“அடடா, வாங்க தம்பி. சொல்லி அனுப்பியிருந்தா நானே வந்திருப்பேனே. உங்களுக்கு எதுக்குச் சிரமம்?” என்றவாறு வரவேற்ற தரகர், அவனை நாற்காலியில் அமரச்செய்துதானும்அமர்ந்துக்கொண்டார்.

“இதோ பாருங்க தரகரே, எனக்கு எப்படிப்பட்ட பொண்ணு தேவைங் கறதை இப்ப நான் உங்களுக்குச் சொல்லப் போறேன். தப்பித் தவறிகூட இதை என் அப்பாவிடமோ, அம்மாவிடமோ மூச்சுவிடக்கூடாது. புரிஞ்சுதா?”

“சரிங்க தம்பி. நீங்க கவலைப்படாதீங்க. விஷயத்தை ரகசியமா வெச்சுக் கிறேன்.” என்றார் தரகர்.

விஷயத்தைச் சொன்னான்.

“ப்பூ... அவ்வளவுத்தானா? ஒரு வாரத் துக்குள் கொண்டு வர்றேன் பாருங்க.” என்றவர், சொன்னதுபோல் ஜாதகத்துடன் பொண்ணுடைய போட்டோவையும் கொண்டு வந்து அழகுசுந்தரத்திடம்

---

# மணிக்கூ

1.
பிரிந்து இணைந்து
பிளந்து பிரித்தது.
கத்தரிக்கோல்.

2.
ஆடை விலை அதிகமோ!
அரை உடையுடன் வருகிறாள்.
நாகரீக நங்கை.

3.
ஆடம்பர வீடு:
தலைக்கு மேல் செல்வம்:
அங்கு அன்புக்குப் பஞ்சம்.

நஸீரா எஸ். ஆப்தீன்

ஒப்படைத்தார் தரகர்.

"பொண்ணு பார்க்க மகாலட்சுமி யாட்டம் நல்ல களையா இருக்கா. ஆனா, நீங்க சொல்ற விவரங்களை வெச்சுப் பார்த்தா வசதி இல்லாதவங்கபோல் தெரியுதே..." என இழுத்தார் அழகுசுந்தரம்.

"பையன் இறங்கி வந்ததே பெரிய விஷயம். சட்டு புட்டுன்னு காரி யத்தை முடிக்கப் பாருங்க." என்றாள் அலமேலு.

ஒரு வழியாக திருமணம் நடந்து முடிந்தது.

முதலிரவில் மணப்பெண் பிரமிளா கேட்டாள்:

"வசதியான பல பெண்கள் வந்தும் அவங்களை நீங்க நிராகரிச்சுட்டு என்னைத் தேர்ந்தெடுத்ததா தரகர் சொன்னார். ஏன் அப்படி?"

அவளை கட்டிலில் அமரச் செய்து கிருஷ்ணராஜ் சொன்னான்:

"வசதி படைச்சவங்க. வசதி படைச்ச வங்களாகவே இருக்காங்க. வறுமையில் உழல்றவங்க, உழன்றுக்கிட்டுத்தான் இருக்காங்க. இது என்ன நியாயம்?

ஆண்டவன் எனக்கு சகல வசதிகளைக் கொடுத்திருக்கிறான். ஓர் ஏழைப் பெண்ணுக்கு நான் அந்த வசதிகளை அனுபவிக்கிற வாய்ப்பைத் தந்திருக்கிறேன். இதுல என்ன தப்பு? என்னைப் பார்த்து இன்றைய இளைஞர் சமுதாயம் என்னைப் பின்பற்றினால், வறுமை ஓரளவுக்குக் குறையுமில்ல? நல்ல அந்தஸ்த்துள்ள பெண் ஏழைப் பையனையும், வசதி படைத்த ஆண் ஏழைப் பெண்ணையும் மணம் முடித்தால் என் எண்ணம் வெற்றிபெறும் இல்லையா?"

'இந்தக் காலத்தில் இவ்வளவு உயர்ந்த உள்ளம் கொண்ட ஆண்களும் இருக்கிறார்களா?' – பிரமித்துப்போனாள் பிரமிளா ■

# மனிதம்

வசை பாடும்
மனதிர்கில்லை பேதம்
இசை பாடும்
குயிலுக்கில்லை பேதம்

உடல் வாடும்
முதுமைக்கில்லை பேதம்
மடல் வாடும்
மலருக்கில்லை பேதம்

உடலுக்குள் இருக்கும்
உதிரத்திற்கில்லை பேதம்
கடலுக்குள் இருக்கும்
நீருக்கில்லை பேதம்

கனவுக்குள் இருக்கும்
கற்பனைக்கில்லை பேதம்
உணவுக்குள் இருக்கும்
ஊட்டச்சத்திற்கில்லை பேதம்

நிழல் தரும்
நிஜத்திற்கில்லை பேதம்
தழல் தரும்
அடுப்பிற்கில்லை பேதம்

மழை தரும்
வானிற்கில்லை பேதம்
தழை தரும்
மரத்திற்கில்லை பேதம்

மனிதா!
நமக்குள் வேண்டாம் பேதம்
மனிதமே! நம் நாதம்

**- சரவிபி ரோசிசந்திரா**



# விடுபடுதல்

சிலவேளைகளில் கற்பனைகள்
உண்மைகளைவிட உன்னதமானவை

நான் வகுப்பறைக்குள் நுழைந்தேன்
பெஞ்சுகளில் பேசாமல் அமர்ந்திருக்கும்
பட்டாம்பூச்சிகள் வணக்கம் சொல்லின

கட்டிப்போட்டு பாடம் நடத்தினால்
பட்டுப்போய்விடுமென யோசித்தேன்
அவற்றின் படபடக்கும் கண்கள்
வானுக்கு அழைத்துப் போகச் சொல்லின

பறக்கத் தொடங்கினோம்
கிறக்கமுற்ற வானம் கைகுலுக்கி வரவேற்றது
வானத்தின் வகுப்பில் கணக்குப் பாடம்
நட்சத்திரங்களை எண்ணச் சொன்னேன்
பறித்துக் கோர்த்து மாலையாக்கி மகிழ்ந்தனர்

விடுதலை பற்றிய பாடத்தில்
கூண்டுக்குள் வேண்டாமென
காற்றிடம் பெருவெளி கேட்டோம்
காற்றும் கடை திறந்து பெருவெளி கொடுத்தது
உண்டு மகிழ்ந்தோம்

நிலவின் சாலையில் நடந்தே வந்தோம்
வடை சுட்ட ஆயா காணாது தவித்தோம்
ஆயா சிறையிலிருக்கிறார் என்றான்
வடை சுடும்போது கேஸ் தீர்ந்துவிட்டதாம்
சிலிண்டரைக் கொடுத்துதவிய
ஆம்ஸ்ட்ராங் உயிர்காற்றின்றி
உயிர்விட்டுவிட்டாராம்...
கற்பனைக்கு எல்லையுண்டா அம்மாவென
அகம் சிரிக்க மகிழ்ந்தனர் ஓ...

# பெண்ணியம் செல்வக்குமாரி

சிலவேளைகளில் கற்பனைகள்
உண்மைகளைவிட உன்னதமானவைதான்


காலம் எங்களைக் கரைக்க
வானத்திடத்தில் விடைபெற்று
மண்ணிடத்தில் இறங்கினோம்
பசுந்தளிரை உடுத்திய மலைகளையும்
நீலாடை உடுத்திய கடலையும்
கலாய்த்துக் கொண்டே சென்றோம்

எதிர்கொண்டு வரவேற்றார் மனுநீதிச் சோழன்
விதிர்த்த மாணவனொருவன்
இவருக்குத் தண்டனை தரவேண்டும் என
செருக்கை முகத்தில் கொண்டான்
ஏனாம்... அவரைப் போய்...
தன் மகனாக இருந்தாலும்
அவன் அனுமதியில்லாமல்
தேர்க்காலில் இட்டுக் கொன்றது தவறம்மா
ஓ.. என்ன தண்டனை தரலாம்
ஆயிரமுறை பனிரெண்டாம் வாய்ப்பாட்டை
எழுதிவரச்சொல்லுங்கள்...

சிலவேளைகளில் கற்பனைகள்
உண்மைகளைவிட உன்னதமானவைதான்

மணியொலித்து
மீண்டும் வகுப்பறைக்குள் வந்தோம்
எனக்குள் அவர்களையும்
அவர்களுக்குள் என்னையும்
இருத்திய சென் தருணம் விடைபெற்றது
விடைபெற்றோம் விலகாமல்...

■



# வசிக்கல்

cycle



அவனுடைய வாப்பாவின் சைக்கிளை அவருக்குத் தெரியாமல் வீதியில் உருட்டித் தள்ளிக் கொண்டு போவான். அவனுடைய தலையும் சைக்கிள் ஹென்ட்டுலும் உயரத்தில் சமனாக இருக்கும். சில நேரம் சைக்கிள் பாரம் தாங்காது அவனுடைய பிடி தவறி கீழே விழும் அதோடு சேர்ந்து அவனும் விழுவான். அப்போது வீதியில் வருகின்ற யாராவதுதான் சைக்கிளைப் பிடித்து நிமிர்த்திக் கொடுக்க வேண்டும்.

ஒரு முறை அவனுடைய வாப்பா இதைக் கண்டு அவனுக்குத் திட்டினார். ''இது வசிக்கல் பழகுற வயசாடா... உழுந்து காலக் கைய ஒடச்சா யாருடா பாக்குற ? இனி வசிக்கல தொட்டா நல்ல சாப்பாடுதான் தருவன்... ஓம் ..''

''இனி தொட மாட்டன் வாப்பா ..''

''கொஞ்சம் நீ பெருக்கணும்டா மவன ''

''நான் எப்ப பெருக்குற... எப்ப வசிக்கல் ஓடுற...''

அவன் மனதிற்குள் நினைத்தானே தவிர வெளியே செல்ல முடியவில்லை. அவனுடைய வாப்பா தத்தியோடு சேர்ந்து பொத்துவிலுக்கு வெள்ளாமை வெட்டவும் கட்டுக் கட்டவும் சூடடிக்கவும் சென்று விட்டார். அவர் ஊருக்குத் திரும்பி வருவதற்கு எப்படியும் ஒரு மாதம் ஆகும்.

அவன் பாடசாலைக்குச் சென்று வந்தான். அவனுடைய உம்மா அவனுக்குச் சோறு

# ராஜகவி ராகில்

கொடுக்கத் தட்டத்தைக் கழுவி சுத்தம் செய்து தட்டத்தில் சோறும் கறியும் வைத்துக் கொடுத்தாள். அவன் தரையில் பாயில் இரண்டு கால்களையும் புத்தரைப் போல மடித்து அமர்ந்து கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். உம்மாவின் முகத்தைப் பார்த்தான் .

'' என்ன மவன் அப்புடிப் பாக்காய் ''

'' ஒண்டுமில்லமா ...''

'' பொய் செல்லாத..வடுவா... நீ பாக்குற பார்வயில தெரிதே ''

அவன் பேசாமல் மீன் ஒரு துண்டை எடுத்து அதன் முள்ளை நீக்கிக் கொண்டு வாயில் போட்டுச் சாப்பிட்டான்

'' பாத்துடா.. முள்ளுக் கிள்ளு குத்திப் பொறுத்துடப் போவுது..''

'' உம்மா... உம்ம.. மா...''

'' என்னடா...''

'' இல்ல.. வந்து... வாப்பாட வசிக்க ... வசிக்கல ..''

'' வசிக்கல ...''

''ஒட்டிப் பழகணும்ங்கா.. தருவியாமா..?''

''நல்லங்கா... வாப்பாக்குத் தெரிஞ்சா கட்டி வெச்சி ஒன்ன உரிச்சிடுவாருடா ''

''வாப்பாதான் இப்ப இலயே...''

"வாப்பா இல்லாட்டி ஒனக்கு தந்தோசமோ..?"

அவன் பதில் சொல்லவில்லை சாப்பிடாமல் அரைகுறையோடு கோபித்துக் கொண்டு எழுந்தான்

''மொதல்ல சோறு திண்டு முடி மவன்... பொறகு லோசிப்பம் ''

''இதுல லோசிக்கிறதுக்கு என்ன இருக்குமா ? ''

''ஒனக்கு ஒண்டும் தெரியா.. நீ சின்னப் புள்ள ''

''எனக்கா ஒண்டும் தெரியா... எனக்கு எல்லாம் தெரியும்''

''செரி.. செரி.. நீ முத்திப் போயிட்டாய்.. அதான் இவ்வளவு கதக்காய்.. நாந்தான்

## அறியா மொழி

தோள்மீதும் மார்மீதும்
போட்டு ஏதேதோ
செய்கையில்
அலுத்துப்போய்
விட்டுப் போகவும்
மனமில்லாமல்
தூக்கிச் செல்லவும்
வலுவின்றி
என்ன செய்வதென
அறியாது தவிக்க
எந்த மொழியினூடக
உரைப்பேன்.
உன் பிள்ளை
மின்கம்பியில் சிக்கி
இறந்துவிட்டதென
அந்த தாய்க்குரங்கிடம்.

**ச.ப.சண்முகம்**
எழுவாம்பாடி.

ஒனக்கு செல்லங் குடுத்துக் கெடுத்திட்டன்''

''செரிமா.. நான் சோறு எல்லாத்தயும் திங்கிறன்.. வசிக்கல தரணும்...''

அவனுடைய உம்மா ஒன்றும் பேச வில்லை. அவன் சாப்பாட்டினைச் சாப்பிட்டு முடித்து, பாத்திரத்திலே தண்ணீரை ஊற்றிக் கை கழுவினான்.

''உம்மா நான் வெளாடப் போறன்.. போயிட்டு வந்த பொறகு வசிக்கல ஓடிப் பழகத் தரணும்.. என்ன செரியா ..? ''

அவன் தன்னுடைய நண்பர்களோடு சேர்ந்து விளையாடுவதற்கு பக்கத்தில் உள்ள மைதானத்திற்குச் சென்றான். அவனுடைய உம்மாவுக்குக் கவலை தொற்றிக் கொண்டது.

தன் மகனை எப்படிச் சமாளிக்கப் போகிறேன் என்ற கவலைதான் அது. அவன் பிடிவாதக்காரன். என்ன சொன்னாலும் கேட்க மாட்டான் என்பதும் அவனுடைய உம்மா அறிந்ததுதான். என்றாலும் அவன் வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் வர, மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டாள் உம்மா

சூரியன் மறைவதற்குத் தயாராக இருக்கும் பொன்னந்திப் பொழுதில் வீட்டுக்கு வந்தான்.

"என்ன வெளாடி முடிஞ்சா... போய் தண்ணிவாத்துக்கு வா. மஹ்ரிப்புக்கு நேரமாவுது... இனிவாங்கு பறியும்... பள்ளிக்கிப் போய் தொழுதுட்டு வந்து பொத்தகம் எடுத்துப் படி" அவனின் உம்மா கொஞ்சம் கோபம் கலந்து சொன்னாள். அப்போதுதான் அவனும் பயப்பிடுவான் என்று எண்ணினாள்

'' உம்.. ம்ம்.. மா...''

''என்ன.. டா ''

''வசிக்கல் பழக ணும்ங்கா...நீ வசிக்கல தாறண்டு சென்னாய் தானே'' வியர்வை ஊறிய மேற் சட்டையைக் கழற்றியவாறு அவன் சொன்னான்.

''இஞ்சப் பாரு... வாப்பா வசிக்கல பூட்டி வெச்சிருக்காரு...துறப்புஅவருக்கிட்டத்தான் இரிக்கும். என்னால ஒண்டும் செய்யேலா..''

அந் நேரம் பார்த்து அவனுடைய உம்மா சாமர்த்தியமாகச் சொன்னாள். சைக்கிள் பூட்டித்தான் இருக்கிறது. ஆனால் திறப்பு அவனுடைய உம்மாவிடந்தான் இருக்கிறது என்பதை அவன் ஓரளவு தீர்மானித்தான்

'' உம்மா... வசிக்கல பூட்டி ஒங்கிட்ட தானே துறப்ப வாப்பா தந்திருப்பாரு. பொய் செல்லாம வசிக்கல் துறப்ப தாமா ''

அவன் பிடிவாதமாகக் கேட்டான்

''சென்னாக் கேக்கணும் மவன்... உம்மா துறப்பு எனக்கிட்ட இல்லடா.. இப்ப ராவு பட்டுடுச்சி ... நாளக்கி எதாச்சும் செய்வம் ..''

''நாளக்கி வசிக்கல் துறப்பு எப்புடி வரும்...? ''

''வாப்பா இங்கதான எங்காச்சும் துறப்ப வெச்சிருப்பாரு.. நான் தேடி எடுக்கிறன் ''

அவனுடைய உம்மா அப்படிச் சொன்ன தும் அவன் சமாதானம் அடைந்தான்.

''உம்மா வசிக்கல துறப்ப தேடி வெய்மா'' அடுத்த நாள் சொல்லிவிட்டு பள்ளிக்கூடத்துக்குச் சென்றான் அவன்.

உம்மா காலைச் சாப்பாட்டை முடித்து விட்டு அவளுடைய தம்பி வீட்டுக்குச் சென்றாள். தம்பி அப்போதுதான் எங்கேயோ செல்வதற்கு பைசிக்களைத் தள்ளிக் கொண்டு அவருடைய மனைவியோடு வீட்டு முற்றத்தில் நின்றார் .

தன் சகோதரி வருவதைக் கண்டதும் புன்னகைத்தார்

''என்ன ராத்தா ..? ''

''வா மதினி வந்து இருங்க ? ''

தம்பி பைசிக்களை முற்றத்தில் நின்ற மாமரத்தில் சாற்றி வைத்தார். தம்பியின் மனைவி முன் திண்ணையில் பாயை எடுத்து விரித்தாள். தம்பி திண்ணைக் கட்டில் உட்கார்த்தார். மச்சி மதினி இருவரும் பாயில் அமர்ந்தார்கள்.

''தேத்தண்ணி ஊத்தட்டா ..''

''தேத்தண்ணி குடிக்க நேரமில்ல மயினி''

''என்ன ராத்தா... அவசரமாவா வந்த... நிண்டு பகலக்கி சோறு திண்டிட்டு போலாமே''

"புள்ள...கதிசா..மாமிவந்திருக்கா.அடுப்புல தண்ணி வெய். வட்டாவயும் கொண்டா ''

''என்ன தம்பி.. எங்க போப்புறாய்..?''

''நாளக்கி வட்டக்க பசள எறியப் போகணும்... அதான் போடியார்ர ஊட்டுப் பக்கம் போகலாமெண்டுதான் ''

அப்போது கதிஜா வெற்றிலை பாக்குத் தட்டத்தைக் கொண்டு வந்து வைத்து விட்டு தன் மாமியைப் பார்த்துப் புன்னகை சிந்திவிட்டுச் சென்றாள்.

மதினி வெற்றிலை எடுத்து மடித்து சுண்ணாம்பு தடவி பாக்கு வைத்துக் கொடுத்தாள். அதை வாங்கிச் சப்பினாள் அவனின் உம்மா .

அவளுடைய மதினியும் வெற்றிலையில் சுண்ணாம்பு பூசி பாக்கு வைத்து மடித்து வாயில் போட்டுச் சாப்பிட்டாள்.

''தம்பி... நான் வந்த என்னண்டா...''

சொல்லி முடிப்பதற்குள் வெற்றிலை சாப்பிட்ட உமிழ் நீர் வாயில் வடிய, அதைக் கையால் துடைத்து விட்டு பக்கத்திலிருந்த படிக்கத்தில் உமிழ்ந்தார் அவளுடைய தம்பி.

தன் சகோதரி என்ன சொல்லப் போகிறார் என்ற எதிர்பார்ப்புடன், அவளுடைய முகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார் .

''ஹ்ம்ம்..பொறகு .. செல்லு மயினி...''

''என்ன ராத்தா.. ஏதும் பிரச்சினயா? ''

''சீ.. அப்புடி ஒண்டுமில்லடா தம்பி... மவன் ராயில்... உடாப்புடியா இருக்கான். வசிக்கல் பழகணுமெண்டு... அதான் மச்சானும் இல்ல. அவரு பொத்துவிலுக்கு வட்ட வேலக்கிப் போயிருக்காரு. வசிக்கல குடுத்தா ஒண்டு உழுந்துடுவான்... கால் கைய ஒடச்சிட்டான் எண்டா என்னால தாங்க ஏலா. மத்தது உழுந்து வசிக்கல் ஓடஞ்சி போனா நா அவருகிட்ட பொய்யச் செல்லணும்...

இதப் பத்திக் கதச்சி ஒரு முடிவ எடுக்கலா மெண்டுதான் தம்பி ஒனக்கிட்ட வந்தன்... என்ன செய்யலாம்... நீதான் செல்லணும்..''

''ஓ.. இதானா வெசயம... இதப்பத்தி ராத்தா நீ கவலப் படாத... நான் பின்னேரமா அங்காலப் பக்கம் வாறன்..''

''மருமவன் செரியான.. ஓரம் போல...''

'' ஓம் மயினி..''

அப்போது கதிஜா தேநீர் கொண்டு வந்து தன் மாமிக்கும் வாப்பாவுக்கும் உம்மாவுக்கும் கொடுத்தாள்

''நீயே போட்டுட்டியா. செரி... மயினி ஒண்ட மருமகள்ற தேத்தண்ணிய குடிச்சிட்டு இங்காலப் பக்கம் வராம இருந்துராத... ஹா ஹா ''

"போம்மா.. ஒனக்கு எப்பவும் பகுடிதான்.."

கதிஜா சொல்லிவிட்டு வெட்கத்தில் அறைப்பக்கமாகச் சென்றாள்.

''செரி பொழுது போயிட்டு இருக்கு. நானும் சோறு கறியாக்கணும்... வாறன் தம்பி... வாறன்

மயினி ''

'' ராத்தா நான் பின்னேரமா வாறன் ''

அவனுடைய உம்மா மீன் கறியும், வாழைக்காய்ச் சுண்டலும் சமைத்து முடிக்கும் போது பகல் ஒரு மணி

"ஹ்ம்ம்... இனி ராயில் மவன் வாற நேரந்தான்... பள்ளிக்கூடம் இனித்தான் உடணும்" அவள் தன் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் .

மகன் வந்த பின் சோற்றையும் கறியை யும் பாத்திரங்களில் போடலாம் என்று எண்ணியவளுக்கு பைசிக்கள் திறப்பு ஞாபகத்திற்கு வந்ததும் அலுமாரியினைத் திறந்து தேடினாள் கிடைக்கவில்லை. அவருடைய தோல் பையை எடுத்து பிரித்து விரித்துப் பார்த்தாள். அதற்குள் பைசிக்கள் திறப்பு இருந்தது.எடுத்துவைத்துக்கொண்டாள்

முன் திண்ணைக்கு வந்து ரேடியோ வைப் போட்டுப் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு தன்னையறியாமல் தூக்கம் போய் விட்டது. திடீரென விழிப்பு வந்து கண்களைத் திறந்த போது ரேடியோவில் பூமாலையில் ஒரு மல்லிகை என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது

திருமணம் முடித்த ஒரு வருசத்திலேயே அவன் பிறந்தான். தாய்க்குத் தலை மகன் என்பதால் அதிக செல்லம் கொடுத்து தன் மகனை வளர்த்தாள். அவள் தன் கணவன் சரியான கோபக்காரன் என்றாலும் நல்ல குணமும் மனமும் உடையவன் என்பதும் அவளுக்குத் தெரியும். அவளோடு நல்ல அன்பும் வைத்திருந்தான் அவளுடைய கணவன்.

அவனுக்குப் பிடித்த மாதிரி தான் நடந்து கொள்ள வேண்டும் என்பதிலும் அவள் கவனமாக இருந்தாள். இதனால் அவர்களுக்குள் பெரிதாகச் சண்டையோ முரண்பாடுகளோ வந்தது கிடையாது.

கணவன் நெருப்பாக இருந்தால் தான் நீராக இருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

சராசரிக் குடும்பம்தான். சந்தோசமான வாழ்க்கை .

'' உம்..ம்மா ...மா '' மகன் வந்து கையைப் பிடித்து அவளை அழைக்கும் வரை ஏதோ நினைப்பிலிருந்து விடுபட்டாள் அவள்.

''ஓ...வந்துட்டியா மவன் .. சாப்பாட்டை ஒன்னத்தான் காத்துக்கு இருந்தன். போய் உடுப்பக் கழட்டி மாத்திட்டு கிணத்தடிக்குப் போய் முகத்தக் கழுவிக் கிட்டு வா ''

அவனும் அப்படியே ஐந்து நிமிடங்க ளில் செய்து விட்டு சாப்பாடு வைத்திருக்கும் பாயில் வந்து அமர்ந்து கொண்டான்.

'' என்ன கறிமா..? ''

''ஒனக்குப் புடிச்ச வாழக்கா சுண்டலும் இலாகன் மீன் கறியும் ''

''வெய்மா... கெதியா... செரியான பசி ''

அவனுடைய உம்மா தட்டத்தில் சாப்பாட்டைப் போட்டுக் கொடுத்தாள். அவன் வயிறு நிறையச் சாப்பிட்டான்.

ஐந்து மணி இருக்கும் அவளுடைய தம்பி வந்தார்.

''சென்ன நேரத்துக்கு வந்துட்டாய் தம்பி.. வா..."

"மவன்.. இங்க வா... மாமா வந்திருக்காரு"

அவன் கிணற்றடிப் பக்கமிருந்து ஓடி வந்தான்.

''மாமா சொகமா இருக்கீங்களா ..?''

''நீ எப்புடி இருக்காய்..? ''

''ம்ம்ம் நான் நல்லம் ''

''மாமா என்னத்துக்கு வந்துருக்காரு தெரியுமா ?''

'' மாமா நெடுகலும் வாறதான..''

''இண்டக்கி ஒனக்கு வசிக்கல் பழக்கப் போறாரு ''

'' அப்புடியா.. மா.. மா..''

அவன் சந்தோசத்தில் துள்ளிக் குதித்தான்.

''மருமவன்... உள்ளுக்கு இரிக்கிற வசிக்கல தள்ளிட்டு வாங்க ...''

அவன் உம்மாவிடம் பைசிக்கள் திறப்பை வாங்கிப் பூட்டினைத் திறந்து ஓரளவு சிரமத்துடன் வெளியே தள்ளியபடி வந்தான்.

''மருமவன்.. நீங்க கெதியாப் பழயிடு வீங்க... ராத்தா ஒண்ட புள்ள வசிக்கல தள்ளுற வடிவப் பாத்தாலே வெளங்குது''

''தம்பி கவனம்...''

''நீ பயப்புடாத ராத்தா... நான் பாத்துப் பழக்குறன் ''

அது கிறவல் வீதி

அவனுடைய மாமா பைசிக்கள் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டு இரண்டு கால்களையும் நிலத்தில் குத்தி நின்றார். அவனைக் முக்கோணக் கம்பிக்குள் ஏற்றி மிதிக்கச் சொன்னார்.

அவர் இரண்டு கால்களையும் விரிக்க அவன் மிதிக்க பைசிக்கள் மெதுவாக நகர்ந்தது. ஆனால் பைசிக்கள் ஹென்டலை அவனுடைய மாமாதான் பிடித்து இருந்தார்.

ஒரு சுற்று முடிந்து இரண்டாவது சுற்றில் மெதுவா அவன் மிதித்துக் கொண்டிருந்தான்.

''மருமவனே.. கெண்டில இப்ப நீங்க புடிக்கீங்களா...? ''

# ஹைக்கூ

1
தேனருந்தும் வண்டு
தவறி கீழே விழுகிறது
கொடியில் மலர்!!

2
சாதிகட்சி அலுவலகம்
அறையை அலங்கரிக்கிறது
பலசாதி மீன்கள்!!!

3
வளைவான மலைப்பாதை
நேர்கோட்டில் நிற்க வைக்கிறது
தரையிறங்கும் பறவை!!

4
மருத்துவமனை வளாகத்தில்
உடைந்த காலுடன் கவனிப்பாரின்றி
சிலையாய் விநாயகர் !!!

5
அடை மழையில்
கால்களுக்கிடையில் தஞ்சமாகிறது
இரு பூனைக்குட்டிகள்!!!

6
சேமித்து வைத்த சோளம்
குறைய குறைய எடைகூடுகிறது
கோழிகளுக்கு!!

7
என்ன நினைத்ததோ?
முடவனை கண்டதும் குரைப்பதை
நிறுத்தியது
அந்த காலுடைந்த நாய்!!!

8
பறவையின் இரை
விரல்களில் மாட்டிக் கொள்கிறது
விரித்த வலை!!!

9
இரையை பிடிக்க
வானத்தை கிழிக்கிறது
நீரிறங்கும் பறவை!!

10
ஆணாதிக்க மனோவியாதி
அப்பட்டமாய் காட்டுகிறது
நேர்கொண்ட பார்வை!!

**ஜீவா**
கோயம்புத்தூர்

''ஓம்.. மாமா ''

''இப்ப புடிங்க.. நான் கெண்டில இருந்து கைய எடுத்துட்டன்... இப்ப பயப்புடாம மிதிங்க''

அவன் ஹென்டலைப் பிடித்து மிதித்தான். பைசிக்கள் ஒரு மூலைக்குள் சென்று விழப்பார்த்தது. அவனுடைய மாமா சமாளித்து திருப்பி விட்டார்.

இப்படிப் பலமுறை நடந்தன. ஆறு சுற்றுச் சென்று வந்தாயிற்று.

இப்போது ஓரளவு ஹென்டலை அவனால் பிடிக்க முடிந்தது.

''இனி நாளக்கி வாறன்...''

தன்னுடைய சகோதரியிடமிருந்து விடை பெற்றுச் சென்றார் அவர்.

பைசிக்களை ஓட்ட விரைவாகக் கற்று விடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு வந்தது.

இப்படியாக ஒரு வாரம் அவர் வந்து அவனுக்கு பைசிக்கள் ஓட்டக் கற்றுக் கொடுத்தார். அவனுக்கு விமானம் ஓட்டுகின்ற மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்தது.

விழாமல் காயப்படாமல் தன் மாமாவின் உதவியால் அவன் பைசிக்கள் நன்றாக ஓடினான். சீட்டில் இருந்துதான் அவனால் பைசிக்கள் ஓட்ட முடியவில்லை. அதற்கு அவனுடைய உயரம் போதாது. கால்களின் நீளம் காணாது.பைசிக்களைக் கவிட்டுக்குள் இருந்து நன்றாக ஓடினான் அவன். அவனுடைய உம்மாவின் பிரச்சினையும் தீர்ந்தது. கவலையும் மாறியது.

பொத்துவிலிலிருந்து ஒரு மாதத்தின் பின் வருவதாக இருந்த அவனுடைய வாப்பா பத்து நாட்களில் காலில் சிறு காயம் ஏற்பட்டு வீட்டுக்கு வந்திருந்தார்.

''புள்ள.. இந்தக் காச அக்கீமுட மவனுக்கு குடுக்கணும்.. இதக் குடுத்து அனுப்ப யாராச்சுமிருந்தா நல்லம்''

உள் அறைக்குள் படுத்துக் கொண்டிருந்த அவனுடைய வாப்பா அவனது உம்மாவிடம் சொன்னார்.

''நம்முட புள்ளக்கிட்ட குடுத்தா அவன் அஞ்சி நிமுசத்துல குடுத்துட்டு வருவானே''

"அஞ்சி நிமுசத்துலயா..? நடயில போனாலே அர மணித்தியாலம் போகும்.. அவன் சின்னப் புள்ள... வேற யாருக்கிட்டயும் குடுத்து அனுப்பு புள்ள"

''செரிங்க..''

பணத்தை வாங்கி தன் மகனை மெதுவாக அழைத்து பணத்தையும் கொடுத்து அனுப்பினாள்.

பத்து நிமிடத்தில் அவன் உரிய இடத்தில் உரிய ஆளிடம் பணத்தினைக் கொடுத்துவிட்டு வந்தான்.

''காசு குடுத்தாச்சிங்க...''

''ஆருக்கிட்ட குடுத்து அனுப்பின ?''

''நம்முட மவந்தான் குடுத்துட்டு வந்த...''

''இவ்வளவு கெதியா...''

''புள்ள இப்ப வசிக்கல ஓட்டறான்ல...''

''என்.. ன்.. ன... வசிக்கல் ஓட்டுறானா.. எப்புடி...?''

''காலாலயும்.. கையாலய்ந்தான்''

''உம்மையாவா... ஆச்சரியமா இரிக்கி..''

அவனின் அடுத்த இலக்கு மோட்டார் சைக்கிள்தான்.

# நீராண்மை மேம்படட்டும்

தண்ணீரோ வெந்நீரோ நீர் வேண்டும்
மண்ணீர் குறையாமல் இருக்க வேண்டும்
கண்ணீர் பெருகாமல் காக்க வேண்டும்
பன்னீர் இல்லையென்றாலும் நன்னீர் வேண்டும்

மற்றவை இல்லையென்றாலும் உயிர் வாழலாம்
உற்ற நீரில்லையேல் உயிர் போய்விடுமே
அற்ற குளத்துப் பறவை போலே துடிதுடிக்குமே
சுற்றம்கூட சுறுசுறுப்பாய் விலகி ஓடிடுமே

ஏரி குளங்கள் வெட்டிய முன்னோர் அறிவாளிகள்
ஊரில் ஓர் ஏரி குளமாவது வேண்டும் என்றனரே
மோரிலும் நீர் மோர் என்று நீர் குடித்தனரே
நாரிலும் நீர் தெளித்து மாலைகள் தொடுத்தனரே

தூர் வாரி ஏரி குளங்கள் மராமத்தாகட்டும்
ஊர் செழிக்க நீர்வழிப் பாதை சீராகட்டும்
தேர் தெப்பங்கள் என எங்கும் நீர் பெருகட்டும்
பார் போற்ற நீராண்மை மேம்படட்டுமே.

**கவிஞர் ராம்க்ருஷ்.**

# பாரதியின் பெண்ணியம் சார்ந்த புதுமைச் சிந்தனையும் பழமை வாதமும்



ராணி மேரி ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் வணிகம் செய்ய முனைந்த கிழ்க்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் மதப்பரப்பலும் இடம் பிடித்தலும் செய்ய மாட்டோம் என்று உறுதிமொழி அளித்து அதை முற்றிலும் தவிர்த்து இந்தியாவில் கிறித்துவ மதத்தைப் பரப்பவும் இடங்களைப் பிடிக்கவும் செய்தனர்

இந்தியாவில் மதப்பரப்புக்கும் இடப்பிடிப்புக்கும் எதிராக எழுந்த கொந்தளிப்புகளால் ஆங்கிலேய அரசு கிழக்கிந்தியக் கம்பெனியின் கைகளில் இருந்து ஆங்கிலேய ஆதிக்கத்தின் கைப்பிடியில் இருந்து பறித்து விக்டோரிய அரசின் ஆட்சிக் குடைக்குக்கீழ் கொணர்ந்தனர்.

இங்கிலாந்தில் புதியன கண்டுபிடித்தப் புதியன தேடல் புதியன படைத்தல் என்ற விக்டோரியா யுகத்தின் தாக்கம் இந்தியாவிலும் உணரப்பட்டது. 1857 -ல் இந்தியர்களின் உயர் கல்விக்கென் மூன்று புதிய பல்கலைக் கழகங்களை நிறுவியும் பெண் கல்வியை முன்னெடுத்தும் ஆங்கிலக் கல்வி மூலம் பெண்டிரின் மேம்பாட்டை வலியுறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன

மேலைநாட்டுச் சிந்தனைச் சாயலில் பெண்கள் முன்னேற்றம் பற்றிய சிந்தனைகள் தொடங்கிய நிலையில் காசியில் வாழ்ந்த பாரதிக்கும் பெண் விடுதலை மற்றும் பெண் மேம்பாட்டுச் சிந்தனை தோன்றியது. சுதேசி இயக்கம் தோன்றுவதற்கு முன்னரே பெண்கள் மேம்பாட்டுக்கான சிந்தனையை ஒட்டிய படைப்புகளைப் பாரதியார் வெளியிட ஆரம்பித்தார்.மேலைநாட்டுச்சிந்தனைகளுக்கு வடிகாலாக அவர் ஆசிரியராகப் பணிபுரிந்த சக்ரவர்த்தினி இதழ் அமைந்தது. விக்டோரியா ராணியைக் குறிக்கும் சக்ரவர்த்தினி பெண்கள் முன்னேற்றம் பற்றிய மேல் நாட்டுச் சிந்தனைகளைத் தமிழர்கள் அறிய அவரும் அவருடன் மற்ற பெண் எழுத்தாளர்கள் பண்டிதை அசலாம்பிகை திருமதி ஆர். எஸ். சுப்புலட்சுமி ஆகியோரு விக்டோரியா யுகத்தில் எழுந்த பெண்கள் முன்னேற்றதை ஒட்டிய சிந்தனைகளையே கருத்துக்களாக வெளியிட்டனர்

சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்கு இடம் பெயர்ந்த பாரதியாரின் பெண்கள் தொடர்பான சிந்தனைகள் இந்துமதச் சிந்தனையை ஒட்டி மாற்றம் பெற ஆரம்பித்தது அவரின் இறுதிக் காலத்தில் அவரின் பெண்கள் பற்றிய கருதுகோள் முற்றும் ஒரு இந்துமத வாதியின் கருத்தாகவே அமைந்திருந்தது

பெண் விடுதலையைப் பற்றிப் பாட்டும், கட்டுரையும் எழுதிய பாரதி, அவருடைய குடும்பப் பெண்களுக்கு விடுதலை



கொடுத்தாரா?

இதோ பாரதி ஆய்வாளர் ரா.அ. பத்மநாபன்: “மாதர் சுதந்திரம் பாடிய கவிஞர் வீட்டில் அவர் இட்டதே சட்டம். செல்லம்மா தவிப்பு சொல்லி மாளாது” என்கிறார்.

“ஒருநாள் பாரதி, 14 வயதான தமது மூத்த மகள் தங்கம்மாவைத் தம்முடன் கடையத்திலிருந்து ஐந்து மைலில் உள்ள ஒரு அய்யனார் கோயிலுக்கு வருமாறு உத்தரவிட்டார். அக்கோவில் மலைச்சாரலில் காட்டு நடுவே உள்ளது... தங்கம்மா தயங்கி வரமறுத்ததால் பாரதிக்கு கோபம் வந்து விட்டது. மகள் கன்னத்தில் விரல் பதிய அறைந்து விட்டார். தடுக்க வந்த மைத்துனர் மீதும் இளைய மாமனார் மீதும் காறி உமிழ்ந்தார்”.

பாரதி ஆய்வாளர் தொ.மு.சி ரகுநாதன்

“பாரதி பற்றிய குறிப்புகள் பலவற்றிலும் மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட, திரிக்கப்பட்ட, திரையிட்டு மூடப்பட்ட இலக்கிய மற்றும் அரசியல் வாழ்வின் ஓர் அம்சத்தைப் பற்றி மட்டுமே இந்த நூலில் ஆராய்ந்திருக்கிறேன்” என்கிறார்.

பாரதியின் பெண்கள் முன்னேற்றம் என்ற கருதுகோள் ஆங்கிலச் சிந்தனை களை அடியொட்டி எழுந்து பின்னர் இந்து சமயவாதியின் நோக்கில் வலுவிழந்து இறங்குமுகாகியது

**நாகராசன்**

## மோட்டார்சைக்கிளும் வாலிபரும்

மோட்டார் சைக்கிள் முறுக்கி எடுத்திடுவார்
ரோட்டு அவருக்கே சொந்தம்போல் - நூற்றுக்கும்
மேலை விசைகூட்டி மின்னல் எனப்பறப்பார்
சாலை விபத்துச் சதா !

சாலை நெடுகில் சனத்தோடு வாகனங்கள்
காளை வயது கணக்கெடுக்கார்- மூளை
சிதறித் தசைசிதறிச் சீக்கிரமே கண்முன்
பதறித் துடித்திறப் பார்!

கிறுக்குங் கிளர்ச்சியுங் கேடே உனக்கு
மரணத்தில் உண்டோ மகிழ்ச்சி? - வெருட்சி
அடைந்த கிடா மாடு அதுபோலே ஓடி
உடைந்தழிவ தாமோ உடல்

வாழப் பிறந்தவர்கள் வாழாமற் சாவதுவோ
காலம் பழியில்லை கைக்கடி - வாளம்
உனது கரத்தேதான் உள்ளதடா உன்றன்
மனதுதான் எல்லாம் மடக்கு!!

**- அ.ம.முகம்மது அலி**



# கருவாட்டு வாடையும், கனகாவும்

– ஹைருன்

பிசுக்கு தட்டிய தலைக்கு சிறு முடிச்சு போட்டு, கொண்டையில சிக்கெடுத்த தலக்கட்டு, ஒரு ஓரமா ஐருகநாடா, காய்ந்த கன்னத்தில் ஒய்ந்து போன முத்தங்கள், கருவாட்டு குழம்பை முழுங்கிய நாக்கில் சிவப்புகம்பளம்போட்டுவெத்தலபாய்போட எத்தன காலமாச்சுடா ஒன்னபார்த்து மவனே என் இரத்தம் உனக்கு துடிக்குமாடா நான் பெத்த மகனே நீய் என்ன நினைச்சியாடா என் தங்கமே.

உணர்வு தெறித்த ஆசைகளில், உள்ளங்கள் பாசத்தில் பொங்கி வழிய இறுகிய ரவிக்கையில் சுத்தியசேலையும் ஒடம்ப மறைக்க, பிய்ந்த செருப்பில் தேய்ந்த நாட்களை தேடி, வாழ்ந்த இன்பத்தை தேடி, காலார கட்டசெருப்புல மண்ணு கால் பட்டு பட்டு இடுப்புல அடிக்க நடந்து போறா இந்த கருவாட்டு கிழவி.

கீழ்விழுந்த மண்ணும் சோரம் போய் சிதறி விழ, தண்ணியை கேட்டு நாக்குவரண்டுநிற்க, குமுச்ச மணலில் பொசுக்குனு தொடை சரிய உட்கார்ந்தாள். போன பொழுதை எண்ணி, பொசுக்குனு இழந்த கற்பை எண்ணி மலச்சு போயி கனா காண, வேல செய்ய போன இடத்துல மெத்தையில கூட்டிட்டு போன குருட்டு ராவுத்தர் கண் முன்னே வந்து நின்றார்.

அரை டவுசர் போட்டு, அரப்பவுனு மோதிரம் போட்டு, இடுப்ப சுத்தி கைலி உடுத்திய குட்ட ராவுத்தர்.

நாக்குல எச்சி ஊறி கனகாவை பார்க்க கை வலிக்க கனகாவபுடிச்சு இறுக்க...

ஐயோ விடுங்க எசமான். நான் வூட்டுக்கு போகனும்.

சும்மா இருடி என் சிங்காரி ஒன்சோலிய முடிக்காம போக மாட்டேன்.

நல்லா சேதி சொல்லிட்டு நிற்கிற எத்தன இரவ்வு கண்டகனவு வாடி என் செல்லம். அம்புட்டு ஆசைடி ஒன்மேல. மளமளன்னு கலட்டுடி ஒன் சேலைய. நேரம் போவுது காத்தாள விடிஞ்சுடும். மெஹ்ரா முழிச்சிடுவா...

எசமான் நான் வேல கேட்டு வந்தேன். பாவம் வுடுங்கய்யா.

என்ன எவ்ளோ தடுத்தும் முடியலை இந்த சிரிக்கிக்கு. அவன் இறுக்கத்துல கற்பு ஒடஞ்சு கிடந்தா. அவ்ளோ தான் இடுப்பு கைலி கசங்க.

எழுந்து நின்றார் குட்ட ராவுத்தர்.

போதையும் போச்சு. பள பளன்னு காலையும் விடிய, அழகாய் கசங்கிய பூவாய் பயந்துட்டே எழுந்து போயிட்டா கனகா வேலைக்கு. வந்த முதல் நா இரவ்வு இப்டியா விடியனும்.

ஓடிப்போயி மளமளன்னு கண்ணுல தண்ணிபொங்க அழுதா. அழுதுட்டே தண்ணிய தலைல ஊத்த, நனஞ்ச முகத்துல கண்ணீரு கரைபுரள அழுதுட்டே குளிச்சா...

என் பாவத்துல வுழுந்தானே பாவிப்பய. ஒனக்கு பாடம் சொல்லாம போக மாட்டேன்டா குட்டப்பயளே.

அப்டினு போட்ட சப தத்தோடு அந்த வூட்டுலேயே பனிஞ்சு கிடந்தா.

பசிக்குதுனு வர்வான் குட்ட ராவுத்தர். எதயாவது அவகைல திணுச்சிட்டுபடுக்க ஆரம்பிச்சான்.

நாளடைவில இவளும் அவன் கை சுகத்துக்குஅடிமைப்பட்டுகிடக்கநீளப்பாயில ஓரமா படுத்து அவனுக்குனு இடம் போடுவா

நாளும் பொழுதுமா இவ வாழ்க்கை ஓட நாகரீக ஜென்மத்துல இர்ந்த இவன், பொண்டாட்டிக்கு செண்ட் பாட்டிலும், பேர் அண்ட் லவ்லியும் தவிர எதுவுமே, இவங்க அடிக்கிற கூத்தும் விளங்கலை.


இவர் பொண்டாட்டியை அவ இஷ்டத் துக்கு விட்டுட்டாரு. பொறுப்பில்லாத பொம்பளையா மாறி ஊர் சுற்றவும், கண்டபடி பணத்த செலவழிக்கவும், ஆடம்பரமா வாழவும் ஆசைப்பட்டுட்டா மெஹ்ரா.


கேட்டதெல்லாம் வாங்கி கொடுத்து ஐஸ் வச்சுட்டே இருக்க, தான் போன போக்குல கனகாட்ட வாழ, இல்லை - எந்த தொல்லையுமே இல்லாமல் போச்சு.

முறுக்கெடுத்த உடம்பும் கமகமன்னு கனகா வாடையும் ஒன்னு சேர சந்தோசமா அழகாப் பொழுது போக கனகா மனசுக்குள்ள சிரிக்க ஆரம்பிச்சா.

ரூட்டு போட்டபடி சர்யா ஓடுது வாழ்க்க.

என் மயக்கத்துல கிடக்குறவரையும் இவனோட பணத்தையும் சுரண்டனும் என்ன பண்ணலாம்... மூளைய சுரண்ட ஆரம்பிச்சுட்டா.





## புன்னகை எப்போது வரும்? காத்திருக்கிறேன்....

சராசரி மனித வாழ்க்கையில்
மகிழ்வின் எல்லையில்
உதடுகள் தருகின்ற
உன்னத வெளிப்பாடே
புனிதமான புன்னகை !
எண்ணங்களின் எளிய
வண்ணமயமான
வாழ்வியலே புன்னகை!
பொலிவுறும் முகத்தோற்றத்தில்
புத்தொளி வீசி
கவர்ந்திழுக்கும் கலைனுட்பமே
புன்னகை!
மற்றவரின் செயல்பாடுகளில்
நிறைவுகளை அடையாளம்
காணும் மௌன வெளிப்பாடே
புன்னகை....
ஒரு புன்னகை ஓராயிரம்
செயல்பாட்டினை செம்மையாக
செயல்படுத்தும் திறனாளி !
வாய்மொழியில் பாராட்டாது
புன்னகைத்து அங்கீகரித்தல்
பண்பாட்டின் எல்லை !
அகத்தின் முகவரியை
முகத்தின் புன்னகை
அறிமுகப்படுத்தும் !
புன்னகை என்ன ....
சந்தையில் வாங்கும்
கடைச்சரக்கா?
டாவின்சியின்
மோனோலிச ஓவியம்
உணர்த்துகிறதே...
புன்னகையின் பேரெழிலை !
முகவரி அற்றுப்போய்
முதுகெலும்பில்லாமல் வாழாதீர்!
புன்னகை முகத்தோடு
புவிமீது புதுக்கவிதை
எழுத வாருங்கள்...
காத்திருக்கிறேன்.....
புன்னகையின் பேரேழில் காண !

**கா.ந.கல்யாணசுந்தரம்**

மூனு மாசத்துக்கு ஒரு பொண்ணு மறுமாசத்துல தள்ளிவுட்டுட்டு கனகாவ விட்டு வெளியே வரலாம்னு பார்த்தா முடியாது போல.

அடியே அழகு சிங்காரி ஒன்ன விட முடியலையேடி. என்னத்த சொல்ல. என்னை என்ன செஞ்ச புள்ள... மறுபக்கம் ராவுத்தர் புலம்ப... இந்த போத மயக்கத்துலேயே பொழுது ஓடிட்டு இர்ந்துச்சு.

அப்பதான் அந்த நேரமும் வர்து.

காலையில வயித்துல ஊத்துன காபித் தண்ணி குமட்டிட்டு வெளிய வர கனகா வாந்தி எடுத்தது ராவுத்தர் பொண்டாட்டி மெஹ்ராவுக்கு காதுல வுழதிட்ட ஆரம்பிச்சுட்டா...

என்னத்த சாப்புட்டடி. இப்டி எடுக்குற வாந்தி...

சத்தம் போட ராவுத்தர் ஓடி வந்துட்டாரு இடுப்பு வேட்டிய கட்டிக்கிட்டு பரபரக்க ஓடி வந்தபடி, ''என்ன வாந்தி என்ன சத்தம் மெஹரா நீய்யா வாந்தி எடுத்த''

''வாந்தி எடுத்தியா அட அல்லாவே இப்பவாவது எங்க கண்ணீர பார்த்தியே...'' அப்டினு ராவுத்தர் சந்தோசத்துல துள்ள... ''அட நீங்க வேற அந்த கனகா வாந்தி எடுக்குறா நீங்க உள்ள போங்க, முதல்ல அவள நான் விசாரிக்கனும்.

ராவுத்தர்க்கு ஈரக்குல நடுங்க

''கனகா... வாயக் கொப்புளுச்சுட்டு வாடி. ஒன்ன விசாரிக்கனும்.''

மெஹ்ரா கத்த, அவளும் படபடன்னு ஒன்னுமே இல்லைனு சொல்ல...

மெஹரா சத்தம் போட்டு கத்த ''எனக்கு பத்து வருசமா குழந்த இல்லை உனக்கு எங்கேயோ போயி திருட்டுத்தனம் பன்னாலும்வந்துடுது. பார்த்தியாடி இதான்டி

வாழ்க்கைனு அவளும் ஆதங்கப்பட்டு, ''இரு ஒன்ன டாக்டர்ட காட்டனும்''னு சொல்லும் போதே பொல பொலன்னு கண்ணீரு...

கனகா அழுதுட்டா. அவ அழுகவும் மெஹ்ரா சரி போடினு விட மெஹராவுக்கு குழப்பம் தீரல.

இன்னைக்கு வேவு பார்க்கணும் அவளைனு முடிவு பண்ண கனகா மேல கண்ணோட்டம் பார்க்க ஆரம்பிச்சுட்டா.

வழக்கம் போல ராவுத்தர் மெஹரா வெளிய போய்ட்டானு நினச்சு சத்தம் போடாம கனகாவ தேடி வர, கனகா அழுவ...

''ஏன் அழுகுறம்மா கலச்சுடு இத. நீ எப்டி பெத்து வாழப்போற இந்த ஒலகத்துல. நான் சொல்றத கேளு கனகா''

''ஒரு நாளைக்கு வலிக்கும் அப்றம் சர்யாப்போயிடும்'' இத ராவுத்தர் சொன்ன நொடிதான். மறைவாய் கேட்ட மெஹரா கண்ணுலயும் தண்ணி கேட்ட அதிர்ச்சியும் ஒன்னு சேர ஓடி வந்துட்டா மெஹ்றா.

''அடப்பாவி மனுசா... இதனால தாண்டா என் வவுத்துல ஒரு புழு பூச்சி வரல. நீ இப்பேர்பட்டவனாடா; பாவி''னு அவர் சட்டய புடிக்க சண்டைவர ஒரு வழியா போராட்டம் முடிவுக்கு வர கைகளப்பு ஓய்ஞ்சு மெஹராவே தீர்ப்பும் சொல்லிட்டா இந்த பிரச்னைக்கு.

''இந்தக் கொழந்தய என் கணவரோட வாரிச... தெர்யாம்ப் போயி பெத்து கொடுத்திட்டு எங்கயாவது போயிடு. புள்ளய நானே வளர்த்துக்குறேன்.நீ வேர கல்யாணம் பண்ணிக்கணும் சர்யாடி. கனகா இல்லைனா இவர் சொன்னத செய்யப்போறியா'' என்று, அன்னைக்கு எடுத்த முடிவுதான்.இன்னைக்கு வரையும். கனகா போயி பார்க்கலை ராவுத்தர. வுட்டுட்டு விலகிட்டா

தாய்ப்பாலோட குழந்தயும் பெத்துப் போட்டுட்டுபோய்ட்டா.பச்சமண்ணவுட்டுட்டு போனவ தான். போனவ தான். இருபது வர்சமாச்சு

என் மவனப்பார்த்துவர, அதான் இந்தக் கிழவி நடந்து போறேன். என்தங்கத்தப் பார்க்க. நான் பண்ண தப்புக்கு அந்த மவராசி எடுத்த முடிவு. எனக்குமே வேணும் தான் இந்த தண்டன. காலம் அவளுக்கு புத்தி சொல்ல சர்யான முடிவுதான்.

காலார அடுச்ச மண்ணும் வழி சொல்ல, கருவாடு வித்த வாடைல அந்த வீச்சத்துல கிடந்தே நகர்ந்து போன வாழ்க்கைய கருவாட்டு வாடையும், கனகாவும் இழந்த கற்பத்தேடி, நடந்தே போறா இந்தக் கனகா செருப்புச்சத்த ஓசையில. செம்மண்ணு வாசத்துல இரத்தப் பாசத்தத்தேடி...

---

# தூரிப்பாக்கள்

அடித்த காற்றில்
தளும்புகிறது
நீர் வரைந்த காகிதம்

புத்தரின் ஆழ் தியானம்
வரங்களைத் தருகிறது
பூக்கள் உதிர்க்கும் மரம்

மழைக்கும்
இடம் கொடுக்கிறது
ஏழையின் வீடு

ஆழ்கடலின் மேல்
நகரும் தீவுகள்
நீலவானில் மேகங்கள்

**சா.கா.பாரதி ராஜா**

செங்கற்பட்டு

# ஆன்மநேயம் வளர்ப்பது

இச்சகத்தே வாழ்கின்ற மக்களுடைக் கூட்டம்
இகல்பெருக்கி வருவதனை நாளும்நாம் காண்போம்.
எச்சிலிலைச் சோற்றுக்கே ஏறியுமே பாய்ந்தே
எதிர்கூச்சல் போடுகிற நாய்களையும் பார்த்தே
இச்சையினை நிறைவேற்றும் முயற்சியினா லென்றும்
இழக்கின்றார் தன்மானம் , தகைமையினை நாளும்
பிச்சையினைப் போக்குதற்குப் பெரிதாக நம்மைப்
பிடித்தபடி நழுவாமல் போகின்ற போக்கே.

தன்வயிறு , தன்வாழ்வு , தன்குடும்பம் என்றே
தனக்கென்று நிறைவேற்ற துடிக்கின்ற போக்கில்
வன்செயல்கள் புரிந்திடவும் தயக்கமின்றி என்றும்
வரம்பிழந்துத் தடுமாறித் திரிகின்ற உள்ளம்
அன்பென்ப தெள்ளளவும் காட்டாத வண்ணம்
அவர்கொண்ட தீநெறியே நோக்கியுமே செல்வார்.
துன்பங்கள் யார்பெறினும் கருத்தின்றி உண்மைத்
தூய்மையிலே வாழ்வுமுறை தோய்ந்திடவே நிற்பார்.

பணநோக்கம் பெரிதாக வாழுகின்ற மாந்தர்
பண்புகுணம் இவைபற்றிக் கருதவுமே மாட்டார்.
நிணங்கொத்தித் திரிகின்ற காக்கையினைப் போலே
நிற்காமல் திரிந்திடுவார் நிதியமுமே கூட்ட.
மணமில்லா வாழ்வதனால் மனிதனுமே தேடும்
மகத்தான ' சிறப்பெதுவோ தெரியவில்லை என்றும்
கணமேனும் நல்லெண்ணம் இல்லாது வீணர்
காசொன்றே குறியாகக் கொள்வாரே அந்தோ.

இத்தனையும் ஆடியபின் நிகழ்வதுவோ என்ன?
இவ்வுலகில் நிலையாக இருப்பீரா நீவீர்?
செத்தொழியும் நாள்தன்னில் சிதைக்குத்தான் போவீர்.
சேர்த்துவைத்த பணமெல்லாம் வந்திடுமா? சொல்வீர்.
பத்துவிரல் மோதிரமும் பறந்திடுதல் காண்பீர்.
பார்த்தவர்கள் 'சவ'மென்று சொல்லுவரே அந்தோ.
சுத்தமிலா வாழ்வுதனை வாழ்ந்துவிட்டீர் நீவீர்.
சுகமெங்கே உமைவந்து நாடிடுமா? சொல்வீர்.


# சமயங்களே

சரஸ்வதி பாஸ்கரன்

ஏசுபிரான் எடுத்துரைத்த ஆன்மநேயம் தானே
 எத்தனையோ இடர்களுக்கோர் மருந்தாக மாறும்.
கூசாமல் மாடுகளின் தொழுவமதின் தன்னில்
 கூடியதோர் பிறப்பெடுத்தார் என்றதொரு செய்தி
நேசத்தை விலங்கிடத்தும் காட்டுகின்ற பெற்றி
 நிலைநாட்ட வந்தசெய்தி ; அறிதலுமே வேண்டும்.
பாசத்தை , நேசத்தை , அன்புதனைப் பெற்றே
 பக்குவமாய் அனைத்துயிரும் பரிமாறிக் கொள்வோம்.

இசுலாத்தின் அல்லாதான் சொன்னதென்ன? சொல்வீர்.
 இவ்வுலகோர் அனைவருமே உடன்பிறந்தோர் ' தானே.
நேசத்தால் ஒன்றுபட்டோர் நினைவிலுமே கொள்க.
 நேயமென்றல் இதுதானே; நேசம்தானே என்றும்
பாசமுடன் உயிர்முழுதும் பழகுதலே என்றல்
 பக்குவத்தின் உயிர்நிலையே அதுவாக நிற்கும்.
வாசமுடன் மலர்கின்ற பூவிடத்தும் என்றும்
 வகையான நேயத்தைக் காட்டுதலே வேண்டும்.

வள்ளலார் வடிவாக்கி நமக்குந்தான் தந்த
 வாய்ப்பான சொற்றொடர்தான் 'ஆன்மீகம்' என்பேன்.
தள்ளரிய இக்கருத்தை வளர்க்கவல்ல என்றும்
 தரமான சக்திகளே சமயம்தான் ஓர்க.
உள்ளுதொறும் இனிக்கின்ற 'ஆன்மீகம்' உண்மை,
 உயர்வதுவும் வளர்வதுவும் சமயத்தால் தானே.
தெள்ளுதமிழ்ச் சொல்லெடுத்து மீண்டும்நான் சொல்வேன்.
 தெளிவான்ம நேயத்தைச் சமயத்தால் காண்க .





# மந்திரமலை

## உமையவன்

### ஒரு பார்வை - பொன். குமார்

ப.இராமசாமி என்னும் இயற்பெயர் கொண்ட உமையவன் ஒரு பன்முகத் தன்மையாளர். சிறுவயதிலேயே பெரும் பணியைச் செய்து கொண்டிருப்பவர். கவிஞர் என்பதை விட எழுத்தாளர் என்று கூறலாம். எல்லா வகையிலும் எழுதி வருகிறார். பல்வேறு சிறப்புகளை பெற்ற ஒரு படைப்பாளராக விளங்குகிறார். சிறுவர் கதைகளையும் சிரத்தையுடன் சிறப்புடன் படைத்து வருகிறார். 'மந்திர மாலை' அவரின் ஆறாம் சிறு கதைத் தொகுப்பு.

'நடக்க நினைத்த கல்' முதல் கதை. நடக்க நினைத்த ஒரு சின்னக் கல் ஓர் ஆட்டின் கால் இடறியதால் உருண்டு பள்ளத்தில் விழுந்து விட்டது. தண்ணீரும் இருந்த தால் தப்பிக்க முடியவில்லை. உதவி செய்ய தவளை, மீன், கொக்கு வந்தும் அப்பா, அம்மா கல்களிடம் சேர்ப்பிக்க முடியவில்லை. சின்னக் கல்லை எப்படி காப்பாற்றுவது என குழந்தைகளிடமே விட்டு விடுகிறார் ஆசிரியர்.

வானத்தில் இருப்பது வட்ட நிலா. நிலத்தில் நீர் நிலைகளில் எல்லாம் தெரியும். குட்டையில் விழுந்த நிலாவைக் காப்பாற்ற முயல்கிறாள் கயல். முடியாமல் கவலைப் படுகிறாள் . நிலா வானத்தில்தான் இருக்கிறது, அதன் பிம்பமே நீரில் காணப்படுகிறது என அப்பா விளக்கிய பிறகே கயல் தெளிவாகிறாள். நிம்மதி அடைகிறாள். 'நீரில் விழுந்த நிலா ' மூலம் சிறுவர்களுக்கும் புரியச் செய்துள்ளார் உமையவன்.

மரத்தை வெட்டக் கூடாது என்று அறிவுறுத்தும் கதை 'சேவிங் செய்த மரம்'. ஆலமரம் தன் விழுதுகளை சேவிங் செய்ய விருப்பப்படுகிறது. ஆமையார் அறிவுறுத்தியும் கிளியார் கோரியதால் சதீஷ் விழுதுகளை அகற்றி விடுகிறான். அடித்த பலத்த காற்றில் ஆலமரம் சாய்ந்து விடுகிறது. ஆலமரத்தின் பலமே அதன் விழுதுகளே என்று உணர்த்தியுள்ளார்.

மாதத்தில் ஒரு நாள் நிலா மறைந்து விடும். இது இயற்கை. சுழற்சி. இச் சுழற்சியை வைத்து கற்பனையாக எழுதப் பட்ட கதை 'காணாமல் போன சூரியன்'.

இயற்கையின் படைப்பில இரவில் வெளிச்சம் தரக்கூடியது மின்மினி பூச்சி. தூக்கணாங்குருவி கூட்டுக்குள் இருக்கும் குஞ்சுக் குருவிகள் இருட்டாக இருப்பதாக அம்மா குருவி மின்மினியை பிடித்து வந்து கூட்டை வெளிச்சமாக்குகிறது. 'இருளில் ஒளிரும் தூக்கணாங்குருவி கூடு' வின் கதை இது.

மின்மினிகளேகூடிவெளிச்சம்தருவதான ஒரு கதை 'குட்டி யானையும் குறட்டைச் சத்தமும்'. நகைச் சுவையான கதை. கூடி வாழ்ந்தால் பாதுகாப்புடன் வாழலாம் என்றும் கதையில் கூறப்பட்டுள்ளது.

கதை சொல்லும் கதை ' கதை மழை '. கதை கேட்கும் தீபாவிற்கு கதைக்கு வறட்சி ஏற்பட்டதால் அப்பாவும் கதை சொல்ல வில்லை. கதை மழை பெய்தால் கதை சொல்ல முடியும் என்கிறார் அப்பா. தீபா வனதேவதையை வேண்டி கதை மழையை


வரவழைத்து விடுகிறாள். உமைநம்வனும் கதை மழை பெய்த தன் விளைவே 'மந்திர மலை'.

'காட்டில் பயங்கர புயல்' வந்தால் எப்படி சமாளிப்பது, வந்த பின் மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்னவென விலங்குகள் முடிவெடுக்கும் கதை. நாட்டில் பயங்கர புயல் வந்தால் எவ்வாறு சமாளிக்க வேண்டுமென அரசுக்கும் அறிவுரைப்பதாக உள்ளது.

'ஏற்றம் இறைத்த விலங்குகள்' கதையும் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க அரசுக்கு உரைப்பதாகவே உள்ளது. கிணற்றிலிருந்து தண்ணீரை மேலே கொண்டு வர விலங்குகள் இயற்கையைப் பயன் படுத்தியுள்ளதாக ஆசிரியர் முன்வைக்கிறார்.

கதைகள் எல்லாமே கற்பனைதான் என்றாலும் 'மந்திர மலை' முழுக்கக் கற்பனை. மலைக்கு விளையாடச் சென்றால் படித்தது எல்லாம் மறந்து விடும் என்றிருந்த சிறுவர்களை மறவாமலிருக்க மந்திரம் சொல்லி வரவழைத்தது மலை. மலைக்கு சிறுவர்கள் விளையாட வராமல் இருப்பது கவலையாக உள்ளதாகவும் எழுதியுள்ளார்.

எழுத்தாளர் உமையவன் சிறுவர் கதைகள் சொல்வதில் சிறந்து விளங்குகிறார். கதையைச் சொல்வதில் சிறுவர்க்கான ஒரு மொழியை அழகாக கைவரப்பெற்றுள்ளார். கதைகளில் கல் பேசுகிறது, கிளி பேசுகிறது, மரம் பேசுகிறது, யானை பேசுகிறது, பேசாத து எல்லாம் பேசுகின்றன. பேசாததை எல்லாம் பேசச் செய்து பேசும் படியான ஒரு குழந்தை எழுத்தாளராகியுள்ளார் உமையவன். கதைகளை குழந்தைகளிடம் உரையாடுவது போல எழுதியுள்ளார். தெளிந்த நீரோடைப் போல கதைச் செல்கிறது. ஒவ்வொரு கதையிலும் ஒரு நீதியைக் கூறியுள்ளார். ஒரு போதனையைச் சொல்லியுள்ளார். கதைகளை வாசிப்பதன் மூலம் வாசிப்பவர்களையும் சிறுவர் கதையுலகத்தில் பிரவேசிக்கச் செய்துள்ளார். சிறுவர்களை உள்ளிழுக்கும் சினேகமான




மொழியைக் கையாண்டுள்ளார். சிறுவர்களின் புனைவாற்றலையும் பெருகச் செய்துள்ளார். கதைகள் கேட்கும் பழக்கமுள்ள சிறுவர்களை கதைகளை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். சிறுவர்களுக்கு பிடித்தமான காடு, மலை, வானம், பூமி, சூரியன், நிலா, நட்சத்திரங்கள், பல வகை பறவைகள் ஆகியவற்றையே பாத்திரங்களாக்கிக் கதைகளைச் சொல்லியிருக்கும் விதம் பாராட்டுக்குரியது. மனிதர்கள் அதிகம் இல்லாத தால் கதைகள் நேர்மையாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. 'மந்திர மலை' யில் உயர்ந்து நிற்கிறார் உமையவன்.


வெளியீடு
பழனியப்பா பிரதர்ஸ்
25 பீட்டர்ஸ் சாலை
சென்னை 600014
விலை ரூ.70.00

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

நவம்பர் 2019



வழிவழி வந்து நம்மை
வளமாக்கும் கவிதை வாழ
விழிவிழி கவிதை என்னும்
விளக்கேற்று நெஞ்ச வீட்டில்